"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2008

தைப்பொங்கல்
வாழ்த்துக்கள





இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மீகக் காலாண்டிதழ்

சங்கத்தின் பணிகளை ஆசீர்வதிக்கும் தவசீலர்களில் சிலர் ............



மணி 16

# கலசம்
KALASAM

ஒலி 57

E-mail: kalasam @ gmail.com

## கருத்துச் சுதந்திரமும் கண்மூடித்தனமும்

பிறரைத் தாக்குவதும் பழிப்பதும் மனித இயல்பு. ஒவ்வொரு குடும்பம்பங்களிலும் கூட இது நடக்கின்றது. இவற்றிலிருந்து விலகி நிற்பவர்கள், விலக முயல்பவர்கள் வித்தகர்கள். தனி மனிதனைத் தாக்குவதையே ஏற்றுக் கொள்ளத் தயங்கும் போது ஒரு சமுதாயத்தை, மனித குலத்தை மேம்படுத்த முனையும் சமயத்தைத் தாக்குவது என்பது ஏற்றுக் கொள்ளக் தக்கதல்ல. அது சான்றோர்க்குரிய குணமல்ல.

சைவ சமயத்தைக் கொச்சைப் படுத்துவதும் எம் சமய உண்மைகளை விகாரப் படுத்துவதும் சிலரது பொழுது போக்கு. தொன்று தொட்டு நிலவிவரும் இந்நிலை மாற வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. எமது சமயத்தைச் சாடியும், சமயக் கருத்துக்களைத் திரித்தும் எழுதப்படும் செய்திகள் பலரைத் துன்பப்படுத்துகின்றன.

புராணங்கள் பொய் என்றும் வழிபாட்டு முறைகளை முட்டாள் தனமென்றும் எழுதும் அறிஞர்களை பற்றி நான் சிந்திப்பதுண்டு. காரணம் சாதாரண சமயவாதிகளைவிட இவர்கள் இறைவனையும், எமது சமயத்தையும் வெகுதூரம் ஆராய்கின்றார்கள். இவர்களின் எண்ணத்திலும் சக்தியிலும் எம் இறைவனைப் பற்றிய சிந்தனையும் ஈடுபாடும் எம்மில் பலரைவிட அதிகமாக இருக்கின்றது. இவர்களும் இறைவனைப் பற்றித்தானே எழுதுகிறார்கள். இவர்களை எம் இறைவன் காப்பாற்றட்டும்.

அதே வேளை ஏற்கெனவே குழம்பிக் கொண்டிருக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழ முனையும் எமது இனத்தவருக்கும் சைவ சமயத்தைத் தாக்குபவர்கள் கொடுக்கும் பதில் என்ன? பிற மதத்தினர் அவர்களது சமயத்தைப் பற்றி தாக்கிப் பேசப்பட்டாலோ எழுதப்பட்டாலோ எழுப்பும் போராட்டங்களையும் எதிர்ப்பினையும் நாம் தெரிவிக்காமல் அமைதி காப்பதால் கருத்துச் சுதந்திரம் கருவழிக்க முற்படுகின்றதா?

மாயை என்பது மறையும் போது மகேசன் மகிமை உணரப்படும். கந்தபுராணம் காட்டும் உண்மை இது. மாயையின் மகனும் கூட தன்னிலையை உணரத்தவறியதால் குமரனைக் கொண்டாடவில்லை என்பதை நாம் உணர் வோம் ஆண்டுதோறும் சூரன்போர் நிகழ்த்தி எம்மில் இவ்வுணர்வை நாம் நினைவுபடுத்தி முன்னேற முயல்கிறோம்.

எனவே மாயை மறையும் போது மனம் திருந்தட்டும்.
தூக்கத்தில் இருப்பவர்களை எழுப்புவோம்.
தூங்குவது போல் பாசாங்கு செய்பவர்களை விட்டுவிடுவோம்.

ஆசிரியர்
சதாசிவம் ஆனந்ததியாகர்.

**"மேன்மைக்கும் மடத்தனத்திற்கும் இடையே உள்ள தூரம் ஓரடிதான்'**

***From the sublime to the ridiculous is but a step.***

### நிர்வாகக் குழு

திரு.சி.அற்புதானந்தன் திரு.சி.தம்பு திரு.சு.வைத்தியநாதன் திரு.வ.இ.இராமநாதன் Dr. ந. நவநீதராசா
திரு.ந.சிவராசன் திரு.செ.தர்மலிங்கம் திரு. ம. ஜெயசீலன் திரு.ச.ஸ்ரீரங்கன் திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732
smsuk77@yahoo.co.uk

# பெரியபுராணம்

"கலைமாமணி"முனைவர். இரா. செல்வக்கணபதி- சென்னை

## மாக்கதை:

சேக்கிழார் இந்நூலுள் "எடுக்கும் மாக்கதை" என்ற தொடரை ஆண்டுள்ளார். மாக்கதை என்பதே 'பெரியகதை' எனப்பொருள்பட்டு, பிற்காலத்தே 'பெரியபுராணம்' என வழங்கலாயிற்று என்றும் கூறுவர்.நாயன்மார் பலரும் செயற்கரிய செயல் செய்த பொ-ியராதலான், இந்நூல் 'பெரியர்புராணம்' எனப்போற்றப் பெற்றுப் பின்னர் 'பெரிய புராணம்' எனத் திரிந்தது என்பாரும் உளர்.

## பின்புலங்கள்:

திருத்தொண்டர் புராண வரலாற்றில், அக்காலச் சோழ மன்னனும், மக்களும்,சீவசிந்தாமணியின் மேல், பெருவிருப்பம் கொண்டிருந்தமையை மாற்றவே, சேக்கிழார் பெரியபுராணம் பாட நேர்ந்தது என்ற குறிப்புக் காணப்படுவது முன்னரே சுட்டப்பெற்றது. வளமும், அமைதியும் நிறைந்த நாடுகளுள், மக்கள், கேளிக்கை நாட்டம் கொண்டு வாழ்வர் என்பது பொதுவான ஒரு மதிப்பீடு. பழையாறையில் ஒடுங்கிக்கிடந்த சோழர்கள், விஜயாலயன் நிகழ்த்திய திருப்புறம்பயப் பெரும்போருக்குப் பின், மீண்டும் தலை எடுத்தனர். நானூறு ஆண்டுகாலம் பிற்காலச் சோழர் ஆட்சி நிலை கொண்டது. காவிரி தந்த வளமும், சோழர் தந்த பாதுகாவலும் காரணங்களாக, மொழி, சமயம், கலைகள் யாவும் வளர்ந்தன. கவலைகள் இல்லாத சோழநாட்டுச் சமுதாய வாழ்வில், மக்கள் கேளிக்கை நாட்டம் கொண்டு, சமண நூல் என்றும் பாராது சீவகசிந்தாமணியின் சிருங்காரச் சுவையில் திளைத்திருக்கலாம். என்பது ஏற்கத்தக்கது.

## ஆடவர் ஒழுக்கம்:

சமய நூல் என்பதற்காக மட்டுமல்லாமல் சிவாலயங்களை பல எழுந்தும், திருமுறைகள் பல தோன்றியும், தம் நாட்டு மக்கள் சீவகசிந்தாமணியின் சிருங்கார ரசத்தில் திளைத:து, பக்தி நெறி மறந்தமையின், அவர்களைச் சைவ நெறியில் திருப்ப வேண்டும் என்ற எண்ணமும், சேக்கிழாருக்கு இருந்திருத்தல் கூடும். சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய ஒன்று இரண்டு நூல்களைத் தவிர தமிழில் எழுந்த பெருங்காப்பியங்கள் பலவும், கதைக் கருவைத் தமிழ் மண்ணில் தேர்ந்து கொள்ளாமல் நடையிட்டதற்குக் காரணம், நன்கு ஆராயப்பட வேண்டும். சமூக ஒழுங்கை விரும்பி தமிழ்ப் பெருங்கவிஞர்களுக்கு, நெறி திறம்பிய ஆடவர் வாழ்வைக் கதைக் கருவாகத் தேர்ந்து கொள்ள விருப்பம் இல்லாது இருக்கலாம்.

## மனித குல ஒருமை:

சோழ நாட்டிலே காவல் மிக்க நல்லாட்சியும், வளமும் இணைந்திருந்தும், தொழில் வழி வந்த சாதியம், சமூக நல்லிணக்கத்திற்குத் தடையாக நின்றது. உறவு, சாதி, மொழி என்பனவற்றிற் கெல்லாம் மேலாக மனித குலத்தைப் பேதமில்லாது ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்ய வல்லது என்ற சேக்கிழாரின் நல்லெண்ணம் கூடப் பெரிய புராணத் தோற்றத்திற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

## வரலாற்று ஆய்வு:

மூன்றாவதாக, பெரியபுராணம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் தோற்றம் கொண்டதற்கு உரிய வேறு ஒரு காரணமும் உண்டு. தமிழில் சங்க இலக்கியங்கள் பலவும், மனிதனை மையப்படுத்தி, மானுடத்தைக கருவாகக்கொண்டே எழுந்தன. இறையவர்கள், சங்க நூல்களில் பாட்டுடைத் தலைவர்களின் அருளையும், ஆற்றலையும் விளக்க, உவமையாகவே முன்னிறுத்தப் பட்டனர். கி.பி. 7 முதல் 12ஆம் நூற்றாண்டுவரைதமிழ்க் கவிதைகளிலிருந்து, மானுடம் அகற்றப்பட்டு இறைவர்கள் முன்னிறுத்தப்பட்டனர்.

## காதலால் விளைந்த கதை:

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமணத்தை வீழ்த்தி, சைவத்திற்குப் புதுவாழ்வு தந்தனர். தமிழ் மொழி தளிர்த்து. தமிழ்க் கலைகளாகிய இசையும் கூத்தும் மீண்டும் தலை எடுத்தன. சைவ சமயம் முடிசூடிக்கொண்டது. இத்தனை இருந்தும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திரு

அவதாரத்திற்கான காரணத்தைச் சொல்ல வந்த சேக்கிழார், மாதவம் செய்த தென் திசை வாழவும், தீதில்லாத அடியவர் வரலாறு கூறும் திருத்தொண்டர் தொகை, தமிழ் மண்ணில் பிறக்கவுமே சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காதல் அரும்பிற்று என்று அழகிய பதிவு செய்கிறார்.

## சிவனார் திருவுள்ளம்:

ஆண்டவன் அருளும் புகழும் பாடுவதிலும் மேலாக, அவன் பெயரால் சிற்றுயிர்களும் மனித குலத்திற்கு அருந்தொண்டாற்றிய மாமனிதர்களும் போற்றப்பெற வேண்டும் என்பதே சேக்கிழாரின் பெருவிருப்பம் என்பது உறுதியாகிறது. சமூக நலம் கலவாத சமய வாழ்வைச் சேக்கிழார் பெரிதாகப் போற்றவில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு முதன் முறையாக 'பித்தா' என்றும், இரண்டாம் முறை அடியவர் புகழ் தொகுக்க 'தில்லை வாழ் அந்தணர்' என்றும் அடி எடுத்துக் கொடுத்ததோடு, சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என அசரீரி பிறப்பித்ததும் கூர்ந்து நோக்கத்தக்கன.

## மானுடத்திற்கு முதன்மை:

எனவே, அளவற்ற பத்திமையில் தலை நின்று, சடங்குச் சமயம் நிலை கொண்டு எழுவதை சேக்கிழார் உணர்ந்திருக்க வேண்டும். மனிதர்களும் மனிதமுயற்சிகளும் அவர்தம் பேராற்றல்களும் உலகவர்முன் நிறுத்தப்பட வேண்டும். ஆண்டவன் நிகழ்த்திய அற்புதங்கள் கேட்டு அதிசயித்து, அந்நியப்பட்டு நிற்பவர்கள் தன் ஒத்த மனிதன் ஒருவன் நிகழ்த்திய அற்புதங்களைச் சுட்டுவதன் மூலம், அவர்களோடு இணைந்து நடையிட வேண்டும் சேக்கிழார் உளம் கொண்டிருத்தல் வேண்டும்.

## மூன்று காரணங்கள்:

மேற்குறித்தவற்றை உற்று நோக்கினால், சேக்கிழாரின் பெரிய புராணம் தோற்றம் கொண்டதற்கான சமூக-சமயத் தாக்கங்களை இனம் காண முடியும். நெறி திறம்பிய ஆடவர்கள் வாழ்வை நேர்படுத்தி, ஒழுக்கம் மிக்க சமயவாழ்விற்கு அவர்களை மடைமாற்றுவது ஒன்று. இரண்டாவது, மனித குலத்தைச் சாதியக் கட்டுக்களிலிருந்து விடுவித்து, ஓர் இறைவன் பெயரால் ஒருங்கிணைப்பது மூன்றாவது, கவிதைகளில் மட்டுமல்லாது, சமூகத்திலும் இறைவனுக்கு இணையாக சற்று மேலாக, மனிதத்தை முன்னிறுத்தி, மக்களைத் தொண்டு நெறிக்கு அழைத்துச்செல்வது.

## திருத்தொண்டத்தொகை:

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணக் காப்பியக் கட்டமைப்பை ஒரு சிறிது காணலாம். திருத்தொண்டத்தொகை பதினொரு பாடல்களால் இயன்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள், அவர் வாழ்ந்த கி.பி எட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னாகவும் வாழ்ந்திருந்த சிவத்தொண்டர்களின் செய்திகளை திரட்டித் தம் திருத்தொண்டத் தொகையில் பதிவு செய்துள்ளார். சிவநெறிச் செல்வர்களை, உரு சேரப் பதிவு செய்ததன் வழி, தமிழக வரலாற்றில், வரலாற்றுக் கண்ணோட்டத்திற்கு முதல் முயற்சி மேற்கொண்ட பெருமை, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அமைகிறது. தனித்தொண்டு ஆற்றியவர்களை மட்டும் திரட்டாது, ஒன்பது குழுவினரையும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிவு செய்துள்ளார். முன்னவர்கள் 'தனி அடியார்கள்' என்றும் பின்னவர்கள் 'தொகை அடியார்கள்' என்றும் குறிக்கப் பெற்றனர்.

## பாராட்டுரைகள்:

சேக்கிழார், தம் நூலின் மும்மையால் உலகாண்ட சருக்கத்தின் நிறைவில்,

**"நேசம் நிறைந்த உள்ளத்தால்**
**நீலம் நிறைந்த மணிகண்டத்து**
**ஈசன் அடியார் பெருமையினை எல்லா**
**உயிரும் தொழ எடுத்து**
**தேசம் உய்யத் திருத்தொண்டத்**
**தொகைமுன்பணித்த திருவாளன்**
**வாச மலர்மென் கழல் வணங்க வந்த**
**பிறப்பை வணங்குவாம்"**

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை நெஞ்சார வணங்கி மகிழ்கிறார். இவ்வாறே தம் நூலுள் சேக்கிழார், இம்முதல் தமிழ் வரலாற்றுப் பதிவை நெஞ்சாரப் போற்றி,

"தென்தமிழ்ப் பயனாய் உள்ள திருத்தொண்டத்தொகை" என்றும்,
"புற்றிடத்து எம் புராணர் அருளினால்
சொற்ற மெய்த் திருத் தொண்டத் தொகை"
என்றும்
"மூலமான திருத்தொண்டத் தொகை"
என்றும் பலவகையில் ஏற்றுப் போற்றுவதைக் காணமுடிகிறது.

## திருத்தொண்டர் திருவந்தாதி:

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சின்னஞ்சிறு பதிவுகளுக்குத் தம் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலால் ஒளியூட்டியவர் நம்பியாண்டார்நம்பிகள். தம் நூலுள் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான் பெருமாள், கோச்செங்கட்சோழர் என்பவர் களுக்கு மட்டும் தலா இரண்டிரண்டு பாடல்களால் வரலாறு வகுக்கின்றார். எஞ்சியோர் வரலாறு மட்டும் பதினொரு பாடல்களால் இடையியே விரிக்கப்பட்டு உள்ளது.

## புகழுரைகள்:

திருத்தொண்டத் தொகைக்கு ஒளியூட்டிய நம்பியாண்டார் நம்பிகளைத் திருத்தொண்டர் திருவந்தாதியின் இறுதியில் காணப்படும் தனிப்பாடல் ஒன்று, திறம் தெரிந்து போற்றுகின்றது.

**"பொன்னி வடகரை சேர்நாரையூரில் புழைக்கைமுக**
**மன்னன் அறுபத்து மூவர் பதி, தேம்,மரபு, செயல்**
**பன்ன அத்தொண்டத் தொகை பல்கும் அந்தாதி தன்னைச்**
**சொன்ன மறைக்குல நம்பி பொற்பாதம் துணை துணையே"**

## காப்பிய உருவாக்கம்:

அக்காலத்தில், கதை நிகழ்த்துவதற்குரிய யாப்பாக விருத்தப்பாக்கள் கண்டு தெளியப்பட்டிருந்தன. சேக்கிழாருக்கும் பெரிதும் இவ் யாப்புப் பயன்பட்டது. தம் பெருங்காப்பியத்தை இரண்டு பெருங் காண்டங்களாகப் பகுத்துக்கொண்டார். திருத்தொண்டர் தொகையின் பதினொரு பாடல்களின் தொடக்கங்களை உள்வைத்துச் சருக்கங்களுக்குப் பெயராகச் சூட்டினார். நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களால் நூல் நிறைவு பெற்றது. விருத்தப்பாக்களோடு, தரவு கொச்சகக் கலிப்பா, கலிநிறைத்துறை, கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம் முதலிய யாப்புக்களும் சேக்கிழாரால் ஏற்றுப் போற்றப்பெற்றன.

## பாதுகாவல் உணர்வு:

திருத்தொண்டத் தொகை குறித்த தனியடியார்கள் அறுபதின்மரோடு, அன்னார் வரலாற்றைப் பதிவு செய்த சுந்தரமூர்த்திசுவாமிகளையும், அவர்தம் பெற்றோர் இருவரையும் இணைத்து, தனியடியார் தொகையை, அறுபத்து மூன்றாகச் சேக்கிழார் உயர்த்திக் கொண்டார்.

## காப்பியக் கட்டமைப்பு:

தமிழ்ப் பெருங்காப்பியம் ஒன்றை முன்னறுத்தித் தமிழில் எவரும் காப்பிய இலக்கணம் படைத்திருக்கவில்லை. வடமொழியிலிருந்து, தண்டி முதலியோர் படைத்த காப்பிய இலக்கணம், தமிழிலும் நிலவியிருந்தது. தன்னேரிலாத் தலைவன் ஒருவன், பெருங்காப்பியத்திற்கு வேண்டும். பல அங்கங்கள் பாடப்பெற வேண்டும். 'அறுபத்து மூன்று சிறுகதைகளின் தொகுப்புப் போல் தோன்றாமல், பெரிய புராணத்தை ஒரு காப்பியக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்த சேக்கிழாரின் புலமைத் திறம் வியப்பைத் தருகிறது. திருத்தொண்டர்த் தொகை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காப்பியத் தலைவராக முன்னிறுத்தி, அவர் வரலாறு புனையும் நோக்கில், அவரால் போற்றி வணங்கப்பெற்ற அடியவர் வரலாறுகளைச் சுவை குன்றாது நிரலே புனைந்து நடுவிலும், நிறைவிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறே நாட்டிக் காப்பியம் நிறைவித்திருப்பது தமிழ்க் காப்பிய உலகிற்கு முதலாகவும் அதுவே இறுதியாகவும் நிற்கிறது. சேக்கிழாரின் பெரிய புராணம், கடந்த எண்ணூறு ஆண்டுகளில் தமிழ்மொழி, தமிழ்க்கலைகள், தமிழர்சமயமாம் சைவம், தமிழ்ச் சமுதாயம் முதலியவற்றின் மேல் பதித்த அடிச்சுவடுகளும் விளைத்த மாற்றங்களும் அடுத்து வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்படவுள்ளன.

## பதிப்புக்கள்:

சேக்கிழாரின் பெரிய புராணத்திற்குச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம், திருப்பனந்தாள் காசி மடம், சென்னை சேக்கிழார் ஆராய்ச்சி மையம் முதலியன நல்ல மூலநூல் பதிப்புக்களை வெளிக்கொண்டு வந்தன.நாவலர் பதிப்பை புதிய பதிப்பாகக் கோலாலம்பூர்ச் சைவசித்தாந்த நிலையம் அழகுற வெளியிட்டுள்ளது. சிவக்கவிமணி திரு.சி.கே. சுப்பிரமணிய முதலியார் மிகவிரிவான முறையில் உரை கண்டு பல தொகுதிகளாக வெளியிட்டார். அமரர் திரு. அ.ச.ஞானசம்பந்தன் பெரிய புராணத்தைப் புதியகோணத்தில் ஆராய்ந்து பல நூல்களை வெளியிட்டார். ஈழப்பகுதியில் பெரியபுராணம் பெரிதும் நிலைகொள்ளத் தவத்திரு. ஆறுமுகநாவலர் எழுதிய பெரியபுராண சூசனம் துணை நின்றது. அவற்றின் திறம் விரிக்கின் பெருகும். ***

# திருநாவுக்கரசுநாயனார்
## (மு. சிவராசா)

சைவசமய குரவர் எனப் போற்றப்படும் நால்வருள் திருநாவுக்கரசு நாயார் ஒருவர் என்பதை அறிவோம். அவர் வாழ்க்கையில் அனுபவித்த பல்வேறுபட்ட துன்பங்கள் எல்லாம் நாம் எம் வாழ்க்கையில் அனுபவிக்கும் துன்பங்களைப் போலவே இருப்பதாகவும் உணர்கின்றோம். அவர் அருளிய தேவாரப் பாடல்களில் தமக்குத் தாமே அறிவுரை கூறுவது போல மக்கள் சமுதாயத்திற்கே வழி காட்டுகிறார் "நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா" என்ற திருத்தாண்டகம் தெரியும் தானே!



திருமுனைப் பாடி நாட்டிலே திருவாமூர் அவர் அவதரித்த திருத்தலம். புகழனார், மாதினியார் என்பவர்கள் அவரின் பெற்றோர்கள். திலகவதியார் அவரது தமக்கையார். திலகவதியாருக்கு கலிப் பகையார் என்னும் சேனாவீரார் ஒருவரை மணம் பேசியிருந்தனர். திருமணம் நடக்கும் முன்பே பெற்றோர் இறந்து விட்டனர். அத்தோடு கலிப்பகையயாரும் யுத்தகளத்தில் மரணம் எய்த திலகவதியார் தம் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றார். மருள்நீக்கியார் என்ற பெயர் கொண்ட தமது தம்பியார் இரந்து வேண்டிக்கொள்ள அவர் தமது முயற்சியைக் கைவிட்டு உயிர் தாங்கி கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழ்ந்தார்.

மருள்நீக்கியார் பலவேறு சமய சாத்திரங்களையும் கற்று யாக்கை நிலையாமையை உணர்ந்து முத்தி நெறி சார முனைந்தார். "காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்ற படி சிவன் அருள் கிட்டாமையால் புகல்தேடி சமண சமயம் சார்ந்தார். பாடலபுரத்துச் சமண் பள்ளியில் சேர்ந்து அச்சமய நூல்கள் கற்று தருமசேனர் என்ற பெயரில் தலைமைத்துவம் பெற்று விளங்கினார். தம்பியார் புறச்சமயம் தழுவியமையால் மனம் வருந்திய திலகவதியார் திருவதிகை வீரட்டானேஸ்வரரை இரந்து தம்பியாரை உய்விக்க வேண்டினார். இறைவன் தருமசேனருக்கு சூலை நோய் வரச்செய்தார். சமணர் வழங்கிய மருந்து, மந்திரங்கள் அவர் நோயைத் தீர்க்கவில்லை. அதனால் திலகவதியாரை அடைந்து, அவரது வழிகாட்டலில் வீரட்டானேஸ்வரர் சந்நிதியில் போய் மீண்டும் சைவராகி விபூதி தரித்துத் தோத்திரம் பாடி சூலை நோய் நீங்கப்பெற்றார். தருமசேனர் சைவசமயம் சார்ந்தமையைப் பொறுக்க மாட்டாத சமணர் அரசனின் உதவியோடு அவரைக் கொல்வதற்குப் பல வழிகளாலும் முயன்றனர். சுண்ணாம்பு அறையில் அடைத்தும், நஞ்சு ஊட்டியும், யானையால் இடறச் செய்ய முயன்றும் தோல்விகள் கண்டு கல்லோடு கட்டி கடலில் வீசினர். சிவன் திருவருளால் இவை யாவற்றிலுமிருந்தும் உயிர் பிழைத்தார். சிவபிரானே அவருக்கு "நாவுக்கரசு" என்றும் நாமத்தை வழங்கியருளினார்.

வாகீசர் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக் கோயில்களுக்கு யாத்திரை செய்வதும், அவர் புகழ் பாடித் துதிதிப்பதும், திருக்கோயில்களின் திருவீதிகளில் உள்ள புற்களைச் செதுக்கிச் சுத்தம் செய்வதுமான சரியைத் தொண்டுகளைச் செய்து வந்தார். இவர் எம்பெருமான் துணைக்கொண்டு பற்பல அற்புதங்கள் செய்து சைவ சமயமே மெய்ச் சமயம் என்பதை நிறுவியருளினார். பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகளின் மகனை

உயிர் பெற்றெழச் செய்தமை,திருமறைக்காட்டுத் திருக்கோயிலின் பூட்டப்பட்டிருந்த திருக்கதவைத் தேவாரம் பாடித் திறக்கச் செய்தமை, திருவீழி மிழலையில் படிக்காசு பெற்று வறுமையில் வாடிய மக்களுக்கு உணவு அளித்தமை அவர் செய்த அற்புதங்களில் சிலவாகும்.
வாகீசப் பெருந்தகை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருடன் கூடி பல திருத்தலங்களைத் தரிசித்து தேவாரம் பாடியுள்ளார். திருக்கைலாய தரிசனம் செய்ய முயன்ற இவருக்கு சிவபிரான் திருவையாற்றில் கைலைக் காட்சி அருளினார்.

தமது கடைசிக் கலாத்தில் திருப்புகலூரில் தங்கியிருந்து திருக்கோயில் வீதிகளில் திருத்தொண்டு செய்து கொண்டி ருக்கையில் இவ்வுலக வாழ்வை நீத்து எம்பெருமான் திருவடிகளை அடைந்தார். அப்போது அவருக்கு வயது 81.

நாவுக்கரசு பெருமான் அருளிய பாசுரங்கள் தேவாரம் எனப்படும். இவை 4, 5, 6ஆம் திரு முறைகளாகத் தொகுக்கப்பட்டன. ஆறாம் திருமுறையிலுள்ளன வாகிய திருத்தாண்டகங்களின் சிறப்புக் காரணமான இவருக்கு தாண்டகவேந்தர் என்ற பெயரும் வழங்குவதாயிற்று. புறச்சமய இருளில் மூழ்காது சைவ சமயம் சார்ந்து மக்கள் உய்ய வேண்டும் என்னும் பெருங்கருணையினால் தமது திருவாக்குகளாலும், செயல்களாலும் இந்நாயனார் நமக்கெல்லாம் உய்யும் வழி காட்டியுள்ளார்.

வந்து தமக்கையார் அருளால் நீறு சாத்தி
வண்தமிழால் நோய் தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம் வேழம் வேலை நீந்தி
வியன் சூலம் கொடி இடபம் விளங்கச் சாத்தி
அந்தமில் அப்பூதி மகற்கு அரவு மாற்றி
அருட்காசு பெற்று மறை அடைப்பு நீக்கி
புந்தி மகிழ்ந்து ஐயாற்றில் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன்பாதம் பொருந்தினாரே

-உமாபதிசிவாசாரியார்

# பிரயாணக் கட்டுரை குருவாயூரப்பன்

சாவகச்சேரியூர் டாக்டர் க. கதிர்காமநாதன்

"குருவாயூரப்பன்" என்று கேரள மக்கள் கூறுவது நாம் பிள்ளையாரே, சிவனே, முருகனே, அம்பாளே, வைரவரே என அந்தரத்திலோ, ஆபத்தான நேரத்திலோ கூறுவது போலாகும்.
குரு - குருபகவான், வாயு- வாயு பகவன், அப்பன்- கடவுள் குருபகவானும் வாயுபகவானும் வணங்கிய தலமாதலால் குருவாயூர் என பெயர் பெற்றது.

இக் கோயிலைத் தரிசிக்க அனுமதிக் கட்டணம் கிடையாது. இது திருப்பதிக்கு அடுத்ததாக வருமானம் உள்ள இந்தியக் கோயிலாகும். இங்கு கிருஷ்ணன், குழந்தை வடிவில் நின்ற நிலையில் நான்கு கைக-ளில் சங்கு, சக்கரம், தாமரைப்பூ, கதையோடு காட்சியளிக்கின்றார். திருமாலின் பத்து அவதாரங்களில், கிருஷ்ண அவதாரமே, தெய்விகமானதால், சிறந்தது எனக் குறிப்பிடத்தக்கது. இத் தெய்விக தோற்றம் ஏனைய கோயில்களில் உள்ளது போன்று கல்லில் உருவாக்கப்படாமல், சுலபத்தில் கிடைக்காத பாதாள அஞ்சனத்தால் உண்டாக்கப்பட்டது. இது மாத்திரமன்றி காலடியில் சூரியக் கதிர்கள் சித்திரை மாத (மேடவிஷு) தினத்தன்று விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது.



ஆதி சங்கரரின் ஞாபக மண்டபத்தை தரிசித்த பின்னர் குருவாயூரை நோக்கி காரில் சென்றோம். குருவாயூரப்பனின் கோயிலில் வழிபாட்டு முறையை ஆதிசங்கரரே வழிவகுத்ததாகும். பிரயாணம் செய்யும் போது தெருவில் யானை ஒன்று மதம் பிடித்து அட்டகாசம் புரிந்ததால் பதட்ட நிலையும், வாகனங்கள் நிற்பாட்டப்பட்டும், சனங்கள் அவதிப்பட்டு அல்லோல

கல்லோலமாய் அலைந்து பதறி ஒடுவதைக் கண்டோம்.

கேரளாவில் யானைகள் அதிகம். நாம் பசுக்கன்று கோயிலுக்கு தானமாகக் கொடுப்பது போல் இங்கு யானையையே தானமாகக் கொடுப்பார்கள். ஒரு சமயம் குருவாயூரில் 60 யானைகள் இருந்தன. தற்போது 45ஆக குறைந்து விட்டது. யானைகளுக்குக் கிருஷ்ணனின் பெயர்களே சூட்டப்பட்டிருக்கும். 1973ஆம் ஆண்டு கேசவன் என்ற யானையின் அறுபதுவயது பிறந்த தினத்தை ஒட்டியும் அதன் ஐம்பது வருட சேவையை மெய்ச்சியும் சஷ்டியப்பத பூர்த்திவிழா நடைபெற்றது.

## இந்துக்கள் மட்டும்:

மாலை கோயிலுக்கு சமீபமுள்ள ருக்மணி விடுதியை அடைந்து தங்கினோம். பிரயாண அலுப்புத் தீர குளித்து, மனைவியோடு கோயிலைத் தரிசிக்கச் சென்றோம். கோயிலுக்குச் செல்லும் வழியில் அலங்காரங்களும் மின் விளக்குகளும் இருப்பதைக் கண்டோம். இரு மருங்கும் கடைகள், போசனசாலைகள், பூக் கடைகள் யாவும் இருந்தன. கோயில் கேரள முறைப்படி அகன்ற அடிவாரமும், உயரமும் கூர்மைகொண்ட மேல் கூரையமைப்பும் கொண்டு இருந்தது. கொடிக் கம்பத்தில் கொடி ஏற்றி இருந்தது. எமக்கு நல்ல காலம் போலும் அன்று மூன்றாம் திருவிழா எனக் கூறினர். மாசி-பங்குனி மாதத்தில் திரு விழாக்கள் தொடங்கி பத்து நாட்கள் நடைபெறும். கோயிலின் முன்பு "இக் கோயிலை இந்துக்கள் மட்டும் தரிசிக்க முடியும்" என்ற அறிவிப்பு மலையாளத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும், வேறு சில மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன. இதைப் பார்த்ததும் கேரளாவில் பிறந்தும், இந்து சமய பாடல்கள் பாடியும் பெயர் பெற்ற "பத்மஸ்ரீ" ஜேசுதாஸ் அவர்களைப் பிறமதத்தவர் என்றபடியால் தடை செய்தமை ஞாபகத்திற்கு வந்தது.நீண்ட வரிசையில் நின்று தான் கோயிலை அடைந்தோம். வாசலில் பொலிஸாரும், தொண்டர்களும் நின்று ஒழுங்கை முறைப்படுத்தினர். ஆண்கள் யாவரையும் மேல் உடுப்பைக் கழற்றுமாறு கோரினர். கையிலிருந்த புகைப்படக் கருவி, பொதிகளை உள்ளே அனுமதிக்கவில்லை வாசலை அடையும் போது ஓடும் நீர், கால்களை கழுவித் தூய்மைப் படுத்தியது. படியை கையால் தொட்டு வணங்கி உள்ளே புகும் போது எனது உடல் எனையறியாமலே மயிர்கூச்செறிந்தது. கோயிலினுள் முதற்கண்டது மூன்று யானைகள் ஒரே நிரையில் நிற்பதையும், பக்கதர்களையும் மேள, தாள வாத்திய இசை சூழலைப் புனிதமாக்கியது. யானை வரிசையின் முன்பு இருமருங்கும் நூற்றுக்கணக்கான மேளகாரர்கள் கொம்பு, சங்கு, ஊதுபவர்கள் வெள்ளை வேட்டி சீராக அணிந்து இசை மழை பொழிந்து கொண்டிருந்தனர். வரிசையில் சென்று கடவுளின் சன்னிதானத்திற்கு அருகில் நின்று சின்னஞ்சிறு கண்ணனாக நிற்கும் அப்பனை வணங்கினோம். இறைவனுக்குப் பூசை செய்யும் அர்ச்சகரை நம்பூதிரி என இங்கு அழைப்பார்கள். தலைமை அர்ச்சகர் மனை வாழ்க்கையை விடுத்து ஆறுமாத காலத்திற்கு கேயிலிலே தங்கவேண்டும். பிரமச்சாரிய தூய்மை நெறி வாழ்க்கையை இக் கோயிலில் கடைப்பிடிப்பது போற்றத்தக்கது. அப்பனோடு, விநாயகர், சாஸ்தா, துர்க்கை, பகவதி சன்னிதிகளையும் வணங்கினோம்.

**சீவேலி** என்பது மூன்று யானைகள் வீதி வலம் வரும் திருவிழாவாகும். சுவாமி யானைமீதமர்ந்து மேள, தாள, கொம்பு, சங்கு ஒலிகளோடு 'அன்னபலி' இட்டு வருவதாகும். மும்முறை இவ்வலம் வரும். திருவிழா நாட்கள் மட்டுமன்றி தினமும் சீவேலி நடைபெறும்.

**கூத்தம்பலம்**

கோயிலின் முன்பு இடது பக்கத்தில் கூத்தம்பலம் இருக்கின்றது. இங்கு கூத்து, சொற்பொழிவுகள் நடைபெறும். கிருஷ்ணணாட்டம் எனும் கூத்தை பார்க்கும் வாய்ப்புக் கிடைத்து. கிருஷ்ணணாட்டம் என்பது எட்டுப் பிரிவாகப் பிரித்து அவதாரம், கம்சவதம், சுயம்வரம் என கிருஷ்ணனின் கதையைக் கூறுகின்றது. பரத நாட்டியம் பார்த்த நமக்கு இவர்களின் கதக்களி நடனம் மெதுவாக நத்தை வேகத்தில் நடைபெறுவது போன்றிருந்தது.

நிகழ்ச்சியை சிறிது நேரம் பார்த்த பின்னர் மீண்டும் கேயிலுக்குள் சென்றோம். அங்கு இலட்ச தீபாராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இரவில் கோயிலைச் சுற்றி உள்ள மதிற் சுவற்றில் நூற்றுக்கணக்கான அகல் விளக்குகளை பிரார்த்தனை செய்வோர் முதலில் ஏற்றினர். பின்னர் ஏனையோர்



ஏற்றினர். இது கண்கொள்ளாக் காட்சியாகும். கோயிலில் வெளி வீதியை சுற்றிவலம் வந்தோம். மின் விளக்குகளால் சுற்றிலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. வடபுறம் ருத்ர தீர்த்தம் எனும் கேணி. அதில் அவ் இரவு வேளையிலும் மக்கள் நீராடிக் கொண்டிருந்தனர். மின் விளக்குகளின் பிரதிபிம்பத்தை ருத்ரதீர்த்தத்தில் பார்த்ததும் மனம் உவகை அடைந்தது.

மறுநாள் 13-03-2006 திங்கள் மாசி மகம். அதிகாலை ஒரு மணிக்கே எழுந்து நீராடி நிர்மாலய தரிசனத்திற்கு காலை இரண்டு மணிக்குச் சென்றோம். அதிகமானோர் ருத்ர தீர்தத்தில் நீராடித்தான் கோயிலுக்குள் வருவார்கள். கிருஷ்ணனின் பக்திப் பாடல்களைக் கேட்டு அமைதியாகவும், பொறுமையாகவும் நின்றனர். நிர்மால்ய தரிசனம் என்பது முதல் நாளன்று அலங்காரம் செய்யப்பட்ட மலர்மாலைகள், துளசிமாலைகள் போன்றவற்றுடன் குருவாயூரப்பன் அதிகாலை மூன்று மணிக்கு தரிசனம் தரும் காட்சியாகும். பல பூசைகள் நடந்தாலும் இதுதான் யாவற்றிலும் சிறந்தது. முதலில் அலங்காரங்கள் கலைக்கப்பட்டு நீரால் அபிசேகம் செய்யும் காட்சியைக் கண்டோம். பிரம்ம கலச மந்திரம் ஜபித்து தங்கக்குடத்திலிருக்கும் புனிதப்படுத்திய நீரால் அபிசேகம் நடைபெறும். வாசலில் வரிசையில் நின்ற போது சின்னக் கண்ணன், கிழக்கு நோக்கி எம்மைப் பார்ப்பது இன்னும் பசுமரத்தாணி போன்று மனதில் நிற்கின்றது.

இதன் பின்னர் எண்ணெய்க் காப்பு. சங்காபிசேகம் நடைபெறும். நைவேத்தியமாக அரிசிப்பொரி, சர்க்கரை, கதலிப்பழம் ஆகியவை படைக்கப்படும். முந்தைய தினம் போல் மீண்டும் வரிசையில் சேர்ந்து ஆசை தீர அப்பனைத் தரிசித்தோம். மீண்டும் காலை 9.30 மணிக்கு கோயிலுக்குச் சென்றோம்.

**துலாபாரம்:**

ஒருவரின் எடைக்கு நிகராக தங்கம், வெள்ளி, பழவகைகள், வாழைப்பழம், அரிசி போன்ற பொருட்களை இறைவனுக்கு அளிக்கும் ஒரு வகை தானம் ஆகும். தமது குழந்தையின் நோய் நீங்க வேலை கிடைக்க வெற்றி பெற, பரீட்சையில் சித்தி பெற வேண்டி பின்னர் நிறைவேறிய பின் கொடுப்பதாகும். ஒரு பெண்மணி ஒரு தட்டில் இருக்கவும் அப்பெண்ணின் எடைக்கு நிகராக வாழைக்குலைகளை அடுக்கிவைப்பதையும் கண்டோம்.

**கஜேந்திர மோட்சம்:**

குருவாயூரை பூலோக வைகுந்தம் என்பர். முன் கூறிப்பிட்ட யானை "கேசவனை" தற்போதும் ரூபமாக ஞாபக சின்னமாக வைத்திருக்கின்றார்கள். கடவுளுக்கு சேவை செய்த இக் கஜராஜன் நோய்வாய்ப்பட்டு இறுயிதில் தண்ணீர் மட்டும் குடித்து, பின்பு நீரும் அருந்தாமல் ஏகாதசி காலையில் துதிக்கையை நீட்டி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்த வண்ணம் உயிர் நீத்தது. முன்பும் ஏகாதசியில் கண்ணன் அருச்சுனனுக்கு விஸ்வரூபம் காட்டினான். "கேசவனுக்கோ" கஜேந்திர மோட்சம் கிடைத்தது. குருவாயூரை தரிசிப்பவர்கள் சமீபத்திலுள்ள மம்மியூர் சென்று மகாதேவர், பகவதி கேயில்களையும் தரிசிக்க வேண்டும் என்பது மரபு. நாமும் சென்று தரிசித்தோம்.

குருவாயூரைக் கோட்டயம், ஆலபுழை, திருச்சூர் போன்ற இடங்களிலிருந்து பேரூந்து மூலம் அடையலாம். ரயில் மார்க்கமாக குட்டிபுரம் மட்டும் சென்று பின்னர் பஸ்மூலம் செல்லலாம்.

"குழந்தை ஒன்று சிரிக்குது குருவாயூரிலே
குருவாயருள் வழங்குது நாம் வணங்கும் போதிலே"

**********

# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

நூலகத்திற்கு நுழைந்தனர் தாத்தாவும், கண்ணனும். தமிழ்ப் புத்தகங்களிருக்கும் பகுதியில் தாத்தாவைக் கொண்டு போய் விட்டுவிட்டு ஆங்கிலப் புத்தகங்கள் உள்ள பகுதிக்குக் கண்ணன் செல்கிறான். தமிழ்ப் புத்தகங்கள் அடுக்கி வைத்திருந்த பகுதியைச் சுற்றிப் பார்த்துப் பிரமித்தார் தாத்தா.இலண்டனில் உள்ள நூலகத்தில் இவ்வளவு இலக்கிய சமயப் புத்தகங்களா? தேவராம், திருவாசகம், நலாயிரந்திவ்ய பிரபந்தம், இராமாயணம், நாவல்கள், சிறுகதைகள் எத்தனை? எத்தனை?

**கண்ணன்**: என்ன தாத்தா! புத்தகங்களைப் பார்த்தபடியே நிற்கிறீர்கள். என்ன புத்தகம் எடுக்கலாம் என்று யோசிக்கிறீர்களா?
**தாத்தா:** இந்த இலண்டனிலுள்ள நூலகத்தில் இவ்வளவு தமிழ்ப் புத்தகங்கள் இருக்குமென்று நான் நினைக்கவேயில்லை. அதுதான் வியப்பிலாழ்ந்து விட்டேன்.

**கண்ணன்:** இந்த நூலகத்தில் மட்டுமல்ல இலண்டனிலுள்ள எல்லா நூலகங்களிலும், தமிழ்ப் புத்தகங்கள் மட்டுமல்ல ஹிந்தி, குஜராத்தி, மலையாளம் போன்ற பிறமொழிப் புத்தகங்கள் எல்லாமே கிடைக்கும். அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தேவைக்கேற்ப நூலகங்கள் புத்தகங்களை எடுத்துக் கொடுக்கும். உங்களுக்கு ஏதாவது புத்தகம் தேவை என்றால் சொல்லுங்கோ. இன்றைக்குச் சொல்லி விட்டுப்போனால் எடுத்த முறை வரும்போது அதனை தமிழ் நாட்டிலிருந்து எடுப்பித்துத் தருவார்கள்.

**தாத்தா:** அப்படியா! பாராட்டவேண்டிய விசயம். இந்த நாட்டிற்கு நாங்கள் நன்றியுடைய வர்களாக இருக்க வேண்டும். கண்ணா! இந்த விசயத்தில் நீ என்னையே மிஞ்சிய அறிவுள்ளவனாக இருக்கிறாய்.

**கண்ணன்:** அதெப்படித்தாத்தா உங்களை மிஞ்சமுடியும்? எனக்குத் தெரியாத நிறைய விசயங்கள் உங்களுக்குத் தெரியுமே! இப்போ என்ன தமிழ்ப் புத்தகங்கள் எடுப்போம் சொல்லுங்கோ.



**தாத்தா:** திருக்குறள் எடுப்போம். அதில் எல்லாமே இருக்கிறது. திருக்குறள் புத்தகத்தை முழுவதும் படித்தால் வேறொன்றும் படிக்கத்தேவையில்லை. அது ஒரு அறிவுக்களஞ்சியம். வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி.

**கண்ணன்:** இது நல்ல வேடிக்கையாக இருக்கே தாத்தா! அப்போ நான் பள்ளிக்குப் போகாமல் திருக்குறளை மட்டும் படித்துவிட்டு வீட்டில் இருக்கலாமா?

**தாத்தா:** அதில்லையடா கண்ணா! நீ இப்படி ஒரு கேள்வி கேட்டு என்னை மடக்குவாயென்று நான் நினைக்கவேயில்லை. நான் என்ன சொல்லவந்தேனென்றால் இந்த உலகில் பலரும் நல்ல வழியில் வாழத்தெரியாமல் தமது வாழ்க்கையை எது வித பயனுமில்லாமல் வாழ்ந்து இறந்து விடுகின்றார்கள். அப்படி இல்லாமல் சிறுவர்களிலிருந்து பெரியவர்கள் வரை எப்படி வாழ்ந்தால் சிறப்பாக வாழலாம் என்பதைச் சொல்கிறது திருக்குறள். எது அவசியம், எது அவசியமில்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது திருக்குறள். நீ ஒரு சிறுவன். உனக்குப் பள்ளிப்படிப்பு அவசியம். அதனால் ஒரு நல்ல வேலை எடுக்கலாம். வசதியாக வாழப் பணம் அவசியம் அல்லவா? இதற்கான விளக்கம்கூடத் திருக்குறளில் இருக்கிறது
**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லையாங்கு"**
கண்ணன்: என்ன தாத்தா ஒரு சொற்பொழிவே செய்து விட்டீர்கள். சரி திருக்குறளை

எடுப்போம் எனக்கு நீதிக்கதைகள் புத்தகம் ஒன்றும் எடுங்கோ.

**தாத்தா:** நல்லது திருக்குறளைப் படிக்கும் போது இடைக்கிடை நீதிக்கதைகளும் படிக்கலாம். அப்போது உனக்கு அலுப்புத்தட்டாது கண்ணா!

**கண்ணன்:** ஆமாம் தாத்தா! என்னைப் போன்ற சிறுவர்களுக்குக் கதைகள் கேட்கத்தான் மிக மிக விருப்பம். நான் கேட்ட கதைகள், வாசித்த கதைகள் எப்பவும் நினைவில் இருக்கும். மறக்கவே முடியாது. அதுவும் இல்லாமல் நண்பர்கள் ஒருவருக்கொருவர் சொல்லி மகிழ்வோம். யாருக்குக் கூடக் கதைகள் தெரியும் என்பதிலேயே ஒரு போட்டி.

**தாத்தா:** ஆமாடா கண்ணா! நான் சிறு வயதிலே படித்த காகமும் வடையும், நரியும் நண்டுகளும் இப்பவும் ஞாபகமாக இருக்கு

**கண்ணன்:** அதை எனக்கும் சொல்லியிருக்கிறீர்களே!

**தாத்தா:** எங்கே அந்தக் கதைகளில் உள்ள கருத்துப் பிள்ளைகளுக்கு எப்படி உதவும்.? ஞாபகமிருந்தால் சொல் பார்க்கலாம்.

**கண்ணன்:** சொல்கிறேன் தாத்தா, கேளுங்கள். "உன்னை யாராவது அதிகமாகப் புகழ்ந்தால் அதில் மயங்கி உன்னை மறக்கக் கூடாது. நல்லவர்களை வஞ்சகமான கெட்டவர்கள் ஏமாற்றி விடுவார்கள். நாங்கள் கவனமாகவும் நிதானமாகவும் எப்போதும் இருக்க வேண்டும்.

**தாத்தா:** கெட்டிக்காரன். உனக்கு இன்னும் பல கதைகள் சொல்ல இருக்கு. இப்போ நாங்கள் புத்தகங்களை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் செல்வோம்.

**கண்ணன்:** உங்களுக்கு என்னென்ன புத்தகங்கள் எடுத்திருக்கிறீர்கள்?

**தாத்தா:** எனக்கு திருஞான சம்பந்தர் தேவாரங்கள், திருவாசகம், திருப்பாவை, கல்கியாசிரியர் எழுதிய "மாந்தருள் ஒரு தெய்வம் மகாத்தமா."

**கண்ணன்:** தேவார திருவாசகங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். மற்றப் புத்தகங்களைப் பற்றி நான் கேள்விப்படவேயில்லை.

**தத்தா:** நான் வாசித்துவிட்டு உனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லுவேன்

**கண்ணன்:** சரிதாத்தா வழியில் போகும் போது பேசிக்கொண்டே போகலாம் தானே.

**தாத்தா:** திருஞான சம்பந்தரைப் பற்றிச் சொல்கிறேன். அவர் மூன்று வயதிலேயே தேவாரம் பாடத்தொடங்கினார்.

**கண்ணன்:** திருஞானசம்பந்தரைப் பற்றி "கலசத்தில்" வந்து படித்து விட்டேனே. மறந்து விட்டீர்களா?

**தாத்தா:** ஆமாம் ஆமாம் கொஞ்ச நாட்களுக்கு முன்பு வந்தது. நான் இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்கிறேன். அவர் பாடிய தேவாரங்களையும் கூடவே சொன்னால் இன்னும் சுவாரசியமாக இருக்கும்.

**கண்ணன்:** அப்போ! அது வீட்டிற்குப் போவதற்குள் சொல்லி முடிக்க மாட்டீர்கள். அதை இன்னுமொரு நாளைக்குச் சொல்லுங்கோ.

**தாத்தா:** சரி மொத்தமாக எத்தனை நாயன்மார்கள் இருந்தார்கள் சொல் பார்க்கலாம்.?

**கண்ணன்:** இது மிகவும் சுலபமான கேள்வியாச்சே தாத்தா! அறுபத்து மூன்று நாயன்மார்கள் இருந்தார்கள். லூசியம் சிவன் கோயிலில் இந்த அறுபத்து மூவருக்கும் சிலைகள் உள்ளதே!. அது மட்டுமல்ல சைவ முன்னேற்றச் சங்கம் நாயன்மார் குருபூசை கொண்டாடுகிறார்களே. ஆனபடியால் இது எல்லோருக்கும் தெரிந்த விசயம்.

**தாத்தா:** மந்திரமாவது நீறு என்று ஆரம்பிக்கும் தேவாரம் யார் பாடியவது என்று தெரியுமா? சொல்லு பார்ப்போம்

**கண்ணன்:** ஓ! தெரியுமே. திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம். திருநீற்றின் பெருமையைச் சொல்கிறது.

**தாத்தா:** அதை எப்போது? ஏன் பாடினார் என்று தெரியுமா?

**கண்ணன்:** அதெல்லாம் தெரியாது தாத்தா

**தாத்தா:** இனி அடுத்த கிழமைதான் சொல்லலாம். இப்போ வீடு வந்து விட்டதல்லவா? சரி இப்போ ஓடிப்போய் அழைப்பு மணியை அடி. அப்பா கதவைத் திறப்பார்.

**கண்ணன்:** மணி அடிக்க வேண்டிய தேவையே இல்லை. அப்பா எங்களுக்காக "காத்திருப்பது போல வெளியில் நிற்கிறார்"

******

# திருவைந்தெழுத்து

ச. தனலெச்சுமி
எம்.ஏ எம்.ஃ.பில் தமிழ்த்துறை விரிவுரையாளர்.

சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் என்றால் சிவனையே குறிக்கும். மூன்று என்ற எண் முப்பொருளைக் குறிக்கும். ஐந்து என்ற எண் ஐந்தெழுத்து மந்திரமான "சிவாயநம" என்பதைக்குறிக்கும். ஐந்தின் சிறப்பையும், ஐந்தெழுத்தை ஓதுகின்ற முறையையும், ஐந்தெழுத்தை ஓதுவதால் அடையும் பயனையும் பற்றி இக்கட்டுரையில் ஆராய்வோம்.

## ஐந்தெழுத்து:

சிவமூல மந்திரமாகத் திகழும் திருவைந்தெழுத்து "மகாவாக்கியம்" எனப்படும். ஐந்தெழுத்து வடமொழியில் பஞ்சாட்சரம் என்று அழைக்கப்படுகின்றது. திருவைந்தெழுத்து உயிர்களைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுகின்ற துணையாகும் என்று சைவ சமயம் கூறுகின்றது.

மந்திரங்கள் தம்மை உச்சரிபபோரைக் காப்பன. எல்லா மந்திரங்களுக்கும் மேலான திருவைந்தெழுத்து கணிப்பாரைக் காத்து உய்விப்பது. திருவைந்தெழுத்தை ஓதிவரின் அது மலத்தின் வீரியத்தைக் குறைத்துச் சிவத்தைக் கொடுக்கும்.

## ஐந்தெழுத்தின் பொருள்:

ஐந்தெழுத்தில் ஒவ்வோரேழுத்தும் ஒரு நுண்பொருளைக் குறித்து நிற்கும். அப்பொருள்களாவன:

**சி என்ற எழுத்து சிவனையும்**
**வா என்ற எழுத்து அருட்சக்தியையும்**
**ய என்ற எழுத்து உயிரையும்**
**ந என்ற எழுத்து திரோதான சக்தியையும்**
**ம என்ற எழுத்து ஆணவ மலத்தையும் குறிக்கும்.**

(திரோதன சக்தி மாயை, கன்மம் ஆகிய மலங்கள்)

சிவ என்பது பதியையும், ய என்பது பசுவையும் நம என்பது பாசத்தையும் குறிக்கும். நடுவில் உள்ள பசு என்பது இரு பக்கமும் சென்று பாசத்தோடும் பதியோடும் சாரும் தன்மையுடையது.

இனி வேறொரு வகையிலும் கூறலாம்.

**ந** என்பது உயிர், மாயையில் அழுந்தி நிற்கும் சகலநிலை.
**ப** என்பது உயிர், ஆணவமலமாகிய அறியாமையில் அழுந்தி நிற்கும் கேவல நிலை
**வா** என்பது உயிர் திருவருளில் அழுந்தி நிற்கும் துரிய நிலை.
**சி** என்பது உயிர் சிவத்தில் அழுந்தி நிற்கும் துரியா தீத ஆனந்த நிலை எனவே உயிர் பாசத்தைச் சார்ந்து சகல கேவலங்களையும், பதியைச் சார்ந்து அருள் நிலை, ஆனந்த நிலைகளையும் அடைவது.

அனைத்து நூற்பொருளும் ஐந்தெழுத்தின் பொருளேயாம்:

**"அருள் நூலும் ஆரணமும் அல்லாது ஐந்தின்**
**பொருள் நூல் தெரியப் புகின்"-** திருவருட்பயன்

திருவைந்தெழுத்தின் பொருளை உரைக்கும் அருள் நூலாகிய ஆகமங்களும், அற நூலாகிய வேதங்களும் இவையல்லாத பிற நூல்களும் ஆகிய யாவும் திருவைந்தெழுத்தின் பொருளை விளக்கும் நூல்களேயாம். சான்றாக திருஞான சம்பந்தர்,

**"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது**
**நாதன் நாமம் நமசிவாயவே"**

என்று திருவைந்தெழுத்தின் பெருமையை உரைக்கின்றார்.

**"சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமசிவாயவே"**

என்று திருநாவுக்கரசர் பாடலும் தன் துன்பத்தைத் துடைப்பது நமசிவாய என்னும் மந்திரமே என்று கூறுகின்றார்.

**"நமசிவாய வாழ்க! நாதன் தான் தாள் வாழ்க....."** என்று மாணிக்கவாசகரும் சிவபுராணத்தில் ஐந்தெழுத்தின் பெருமையைக் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் நமசிவாய பதிகம் ஒன்றும் பஞ்சாக்கரப் பதிகம் ஒன்றும் அருளினார். திருநாவுக்கரசு நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் நமச்சிவாயப் பதிகங்கள் அருளினார்கள். திருவைந்தெழுத்தின் பெருமை திருமுறை களிலும் அருள் நூல்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

## இருவகை நடனம்:

**“ஊனநடனம் ஒரு பால், ஒரு பாலா
ஞான நடனம் தான் நடுவே நாடு”-**
திருவருட்பயன்

**சி, வா** என்ற எழுத்துக்கள் ஞானநடனத்தைக் குறிக்கும்.
**ம, ந** என்ற எழுத்துக்கள் ஊன நடனத்தைக் குறிக்கும்.
**ய** என்ற எழுத்து இவ்விரண்டிற்கும் நடுப்பட்டது.

சிவாய நம என்னும் திருவைந்தெழுத்தில் ஊன நடனத்தைக் குறிக்கும் பொருள்கள் ஒரு பக்கம் சேர்ந்திருக்க நடனங்களால் பயன் அடைகின்ற உயிர் அவ்விரு பொருள்களுக்கும் இடையே நிற்கும் என்று திருவருட்பயனில் உமாபதி சிவனார் கூறுகின்றார்.

## திருவைந்தெழுத்தை ஓதும் முறை:

**“சிவனருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்-இவன் நின்று
நம் முதலா ஓதில் அருள் நாடாது நாடும் அருள்
சிம் முதலா ஓதந் சென்று”**
என்ற உண்மை விளக்கப் பாடலின் மூலம் திருவைந்தெழுத்தை ஓதும் முறையை அறியலாம்.

திருவருளைப் பெற விரும்புவோன் உலகியிலில் நின்று நகாரத்தை முதலில் வைத்து ஓதினால் திருவருள் வெளிப்படாது. உலகியலிருந்து நிங்கி, வீட்டு நெறியில் அறிவை நெறிப்படுத்தி நின்று சிகாரத்தை முதலில் வைத்து ஓதினால் திருவருள் உணர்வில் வெளிப்பட்டுத்தோன்றும்.

மந்திரத்தை உச்சரிக்கும் முறை மானதம், (மௌனம்) மந்தம் (மெல்லமாகச் சொல்லுதல்) உரை (உரக்கச் சொல்லுதல்) என மூன்று வகைப்படும்.

திருவைந்தெழுத்தையே மந்திரமாகக் கொண்டு அருச்சனை, ஓமம், தியானம் ஆகியவற்றைச் செய்தல் வேண்டும். அருச்சனையை இதயத்திலும், ஓமத்தை உந்தியிலும், தியானத்தை புருவ நடுவிலும் செய்தல் வேண்டும் என்பதை சிவஞான போதத்தில்
**“அஞ்செழுத்தால் உள்ளம் அரன் உடைமைகண்டு அவனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து இதயத்தில்-அஞ்செழுத்தால்
குண்டலியில் செய்து ஓமம் கோதண்டம் சானிக்கில்
அண்டனாம் சேடனாம் அங்கு”**
என்ற மெய்கண்ட தேவர் பாடலின் மூலம் அறியலாம்

## ஐந்தெழுத்தின் பயன்:

சிகாரம் முதலாக வைத்து இடையறாது ஓதினால் திருவருள் வெளிப்பட்டு உயிரைக் கேவலமும் சகலமும் நீக்கிய அருள் நிலையில் சேர்க்கும் எல்லையற்ற சிவானந்தத்தை நுகரச்செய்யும் அந்நிலையில் அருளான ஆணவமலம் பற்றறக்கழியும்.

ஆதி எனப்படும் திரோதன சக்தியைக் குறிக்கும் **‘ந’** காரமும், மலத்தைக் குறிக்கும் **‘ம’**காரமும் ஆகிய இரண்டு எழுத்துக்களையும் முதலில் வைத்து ஓதினால் மும்மலங்களும் அவற்றால் உண்டாகும் துன்பங்களும் நீங்க மாட்டா.

ஆதலால் **‘சி’**காரம் முதலாக வைத்து மாற்றி முத்தி பஞ்சாக்கரமாகக் கொண்டு விதிப்படி உச்சரித்தால் எண்ணரிய பேரின்ப வீட்டில் வாழலாம்.

**“ஆதி மலம் இரண்டும் ஆதியாய் ஓதினால்
சேதியா மும்மலரும் தீர்வு ஆகா-போதும்
மதிப்பு அரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி
விதிப்படி ஓது அஞ்சு எழுத்துமே”**
என்று உண்மை விளக்கம் என்ற நூலில் மனவாசகங்கடந்தார் திருவைந்தெழுத்தின் பயனை தெளிவுறுத்துவார்.

## திருவைந்தெழுத்தின் சிறப்பு:

சிவபெருமான் அருளிச் செய்த சிறப்பு நூலாகிய ஆகமங்களும், வேதங்களும் ஆகியவை திருவைந்தெழுத்தின் பொருளை விளக்குவன. தலையாய புராணங்கள் அனைத்தும் திருவைந்தெழுத்தின் விளக்கமேயாகும்.

கொடிக்கவி என்னும் நூலில்
**“அஞ்சு எழுத்தும் எட்டு எழுத்தும் ஆறு எழுத்தும்-நால் எழுத்தும்..**
என்ற பாடலில் அஞ்சு எழுத்தின் பெருமையை கூறியுள்ளார் உமாபதி சிவனார்.

சிவஞானபோதம் ஒன்பதாம் நூற்பாவிலும் “விதி எண்ணும் அஞ்செழுத்து” என்று கூறியுள்ளார்
ஆய்வின் முடிவு:

உயிர்கள் பாசங்களை விட்டு அகன்று இறைவனின் திருவருளைப் பெற திருவைந்தெழுத்து பயன்படும். எனவே உயிர்கள் சிவாயநம என்னும் திருவைந்தெழுத்தை ஓதி இறைவனின் அருளைப் பெறலாம்.

********

இறைவன் குருவாக எழுந்தருளி ஆட்கொண்ட சீடர்களில் மாணிக்கவாசகர் குறிக்கத்தக்கவர். சிவஞானபோதத்தின் எட்டாம் நூற்பா இறைவன் குருவாக எழுந்தருளி வருவதைக்குறிக்கிறது. இறைவன் எப்போது குருவாக வருவான் எனில் எந்த உயிர், தான் வந்த நோக்கத்தினையும் வாழும் நோக்கத்தினையும் பயண முடிவு நோக்கத்தினையும் புரிந்து கொண்டு இந்த மண்ணுலகில் ஐம்பொறிகளின் வயப்பட்டு

# "திருவாசகம் என்னும் தேன்"

பேராசிரியர். முனைவர். மு.சிவச்சந்திரன். தருமபுரம்-மயிலாடு துறை



வாழும்போது, மாறி நின்று நம்மை மயக்கும் வஞ்சப் புலன்கள் இவை என்றுணர்ந்து, அவற்றின் வழியில் செல்லாமல், அவற்றையும் திருப்பி, இறை நெறியில் செலுத்துவதற்குக் காத ்திருக்கிறதோ, அதற்காகச் சதா சர்வ காலமும் அழுகிறதோ அந்த உயிருக்கு அதன் உண்மையான ஆர்வம் கருதி, இறைவன் தக்க நேரத்தில் குருவாக எழுந்தருளுவார் என்கிறது சிவஞான போதம். இங்ஙனம் காத்திருந்தவர் மாணிக்கவாசகர். ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் சீடர் இறைவன் நமக்குக் குருவாக வர வேண்டும் என்றெல்லாம் எண்ணிக் கொண்டு இல்லாமல் நம்மைத் தகுதிப்படுத்திக் கொண்டு வாழும்போது, இறைவன் நம் தரம் தெரிந்து அருள வருவான் என்று எண்ண வேண்டும். ஆதலின் சீடரின் தகுதியே குருவை வரவழைக்கும் என்றுணர்தல் வேண்டும். விரும்புவதோ வேண்டுவதோ மட்டும் போதாது. இக்கருத்தில் தான் மாணிக்கவாசகர், தம் அனுபவமாக,

"நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றறேன்
தேனாய் இன்னமுதமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊனாறும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே"

என்று அருளினார். இப்பாடலில் "தானே வந்து" என்பதில்தான் உயிர் இருக்கிறது. உயிரின் தகுதி அங்கீகரிக்கப்படுகிறது. எட்டாம் நூற்பாவும் எட்டாம் திருமுறையும் நமக்கு எட்டா இறைவனை எட்டுவதற்கு வழி வகுக்கின்றன.

மாணிக்கவாசகர், தன்னை "நாய்" என்றும் இறைவனைத் "தாய்" என்றும் கூறிக் கொள்கிறார்.

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!"

என்கிறார். இந்தப் பக்குவம் வந்து விட்டால் குருசீடர் உறவு சித்திக்கும். மேலும் தனக்கென்று தனிவிருப்பம், தனக்கென்ற புலனுணர்வு, பொருளுடைமை, புகழ் அனைத்தையும் துறந்து, அர்ப்பணித்து வாழுதல் வேண்டும். அதனால் தான் மாணிக்கவாசகர், "வேண்டேன் புகழ்" என்று அருளுகின்றார். இந்தப் பக்குவத்தால் தான், பொறி புலன்களால் காண முடியாத இறைவனை அவரால் காண முடிந்தது. "கண்ணால் யானும் கண்டேன் காண்க" என்று பாடுகின்றார்.

இத்தகைய இறையருள் அனுபவத்தைத் தம் அனுபவ மொழியினால் வாரி வழங்கிய அருள் வள்ளல் மாணிக்கவாசகர். இவரை அறிவதை விட, உணர்வது தான் சிறந்தது. தேன், பாத்திரத்தில் இருக்கும் போது நம் நாக்குப் பெறும் இன்பத்தை விட, அதுவே நம் நாவில் வந்து நம் அனுபவமாக மாறினால் தித்திப்புத் தெரியப்படுதல் போலத் திருவாசகம் தொலைவில் இருந்து அறியப்படுவதை விட அருகிருந்து உணரப்படும் பொழுதுதான் - அனுபவமாகும் பொழுதுதான் இந்தத் தேனும் சுவைக்கும், சுவைப்போம்.

***

# நந்தாத் தேன்

## அருள் மொழி அரசி வித்துவான்
## திருமதி வசந்தா வைத்தியநாதன்

"தேன்" இயற்கை தந்த அற்புத மூலிகை. எந்த மருத்துவராலும் கண்டுபிடிக்க முடியாத அதிசயக் கலவை. இறைவன் மனிதகுலத்திற்கு அளித்த அரிய கொடை. ஆயிரமாயிரம் தேனீக்கள் மலர்கள் தோறும் சென்று அரியதாகத் தேடிச் சேர்த்ததைத் தாணுண்ணாமல் நாமக்கு வழங்கிய வள்ளல் பெருமக்கள்.

தேன் மருத்துவப் பயன் மிக்கது. பித்தத்தைப் போக்கும், மந்தத்தை நீக்கும். இரத்தத்தைத் தூய்மையாக்கும். குரலை இனிமைமிகுவிக்கும். புண்களை ஆற்றுவிக்கும் ஆற்றல் கொண்டது. நெருப்புச் சுட்ட புண்ணிற்குக் கூடத் தேன் தடவுவது இப் பயன் கருதியே.

தேனிற்கு மற்றொரு சிறப்பும் உண்டு. பல்லாண்டுகள் ஆனாலும் கெடாத சிறப்புத் தேனிற்கு உண்டு. சான்றாக பல ஆண்டுகளுக்கு முன்னால் திருச்செந்தூர்ப் பகுதியை அகழ்வாராய்ச்சி செய்தார்கள். ஒரு ஜாடி கண்டெடுக்கபட்படது. திறந்து பார்த்தால் தேன் நிரம்பியிருந்தது. பல நூறு ஆண்டுகளுக்கு முன் புதைக்க்கப்பட்டது அம்மண் தாழி. அத்தேன் ஒரு சிறிதும் கெடாதிருந்ததே குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

இனி, தேன் தான் கெடாதது மட்டுமல்ல தன்னைச் சார்ந்த பொருட்களையும் கெட வைக்காது. தேனிலே ஊறவைத்த இஞ்சி, திராட்சை, பேரீச்சம் பழம் இவைகள் ஆண்டுகள் பலவானாலும் புதுமை மாறாது இருக்கும் காரணம் தேனே. நாட்டு மருந்துகள் தேனில் உருவாகும் இரகசியம் இதுவே.

நமது அறிவுக்கு எட்டாமல் உணர்வுகளுக்கு மட்டுமே எட்டாம் திருமுறையாகிய திருவாசகமும் தேனினும் இனிமை வாய்ந்ததாகும். தேனையொத்த திருவாசகம் தான் திரிபுறாது ஒரே தன்மையாக இருத்தலைப் போல தன்னைச் சிந்திப்பவர்களையும் சிதையாத சிறப்புடையது. பழைய சில பாடல்கள் திருவாசகத்தை தேனோடு உவமிக்கும்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லறுத் தானந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூரர் எங்கோன்
திருவா சகம் என்னும் தேன்

கற்பாந்தம் காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே-அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவாசக மென்னும் தேன்

திருவா சகமென்னும் தேன் பருகித் தேசமெல்லாம்
கருவே றறுத்தருளிக் கருங்கடைலை வேர்துளைத்திட்
டுருவா சகமென்னும் உண்மையுணர்ந் துத்தமனார்
திருவா சகமென்னும் தேனினருட் காரணமே.

திருவாசகப் பனுவலில் "தேன்" என்ற சொல் நாற்பத்தேழு இடங்களில் பயின்று வருகின்றது. இது ஒன்றே நந்தாத் தேனாய் தித்திக்கும் திருவாசகப் பெருமையை அறியப் போதாதா? உண்ட தேன் நாக்கின் அடிவரைதான் தித்திக்கும். திருவாசகத் தேனோ உயிரின் அடிவரை சென்று இனிக்கும்.

திருவாசகத்தில் "தேன்" பயின்று வரும் இடங்கள்

**"சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று"**
**"தேசனே தேனா ரமுதே சிவபுரனே"**
**"தேனமார் சோலை திருவாரூரில்"**
**"கோற்றேன் கொண்டு செய்தனன்"**
**"குரம்பை கொண் டின்றேன் பாயத்தி நிரம்பிய"**
**"கருணை வான் தேன் கலக்க"**
**"தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே எம்" (திருச்சதகம் - அறிவுறுத்தல்)**
**"தேனை ஆனெயைக் கரும்பின் தேறலைச்"**
**"தேனி லாவிய திருவருள் புரிந்த என்" (திருச்சதகம் - ஆத்தும சுத்தி)**
**"தேனே அமுதே கரும்பின்" (திருச்சதகம்)**
**"தேனைப் பாலைக் கன்னலின்" (அநுபோகசுத்தி)**
**"தேனே அமுதமே சிந்தைக் கரியாா்"**
**"தேனே அமுதே கரும்பின்" (திருச்சதகம் ஆனந்த பரவசம்)**

"பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்" திருவெம்பாவாய்
"தேன்வந் தமுதின் தெளவி னொளிவந்த"
"தாட்டாமறை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி"
"மையார் குழல்புதளத் தேன்பாய வண்டொலிப்பச்"
"தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய"
"தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்"
"தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரெளிசேர்" (திருவம்மானை)
"நந்தாத் தேனைப் பழச்சுவை ஆயினானைச்"
"தேனகமாமலர்க் கொன்றை பாடிச்" (திருப்பொற்சுண்ணம்)
"தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ"
"தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே"
"தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"(திருக்கோத்தும்பி)
"தேன்புக்க தண்பனைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்" (திருச்சாழல்)
"சுந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த"
"தேனோடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்"
"பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்" (திருப்பூவல்லி)
"தேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்"(திருப்பொன்னூசல்)
"தேன் பழச் சோலை பயிலுஞ்"
"தேன் புரையுஞ் சிந்தையதாய்த் தெய்வப் பொண்ணேத் திடைப்ப"
"கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்" (திருத்தசாங்கம்)
"கண்ணகத் தேநின்று களிதரு தேனே" (திருப்பள்ளியெழுச்சி)
"தேறலின் தெளிவே சிவபெருமானே" (கோயில் மூத்ததிருப்பதிகம்)
"தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து" (அடைக்கலப்பத்து)
"நெல்லிக் கனியைத் தேனைப் பாலை"(புனர்ச்சிப்பத்து)
"தேனார் சடை முடியான் மன்னு திருப்பெருந்துறை உறைவான்"
"கோற்றேன் எனக் கென்கோகுரை கடல்வாய் அமுதென்கோ"
"தேன் பாய்மலர்க் கொன்றை மன்னு திருப்பெருந்துறை உறைவாய்" (உயிருண்ணிப் பத்து)
"தேனினைச் சொரிந்து புறம்புறம் திந்த" (பித்தபத்து)
"தேனாய்இன் இமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்" (திவேசறவு)
"சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன் பருகி" (குலாப்பத்து)
"திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ" (திருவெண்பா)
"உள்ள மலமூன்றும் மாய உருபெருந்தேன்" (பண்டாயநான்மறை)

கல்லையும் கரைவிக்கும் கனிவுடையது திருவாசகம். ஊழிக்காலத்தில் கண்ணுதற் பெருமான் தன்தனிமையைப் போக்குவதற்காகத் திருக்கரம்பட எழுதிவைத்துக் கொண்ட சிவஞானப் பொக்கிஷம் திருவாசகம். சம்ஹிதா மந்திரங்கள் பதினொன்று. இதற்கு மேல் மந்திரமில்லை. இவற்றுள் எட்டாவது மந்திரம் சிகா மந்திரம். சிரசிற்குமேல் எதுவுமேயில்லை. அதுவே மேலானது. அதுபோல எட்டாவது திருமுறையாக விளங்கும் திருவாசகத்திற்கு மேல் வேறு நூல் இல்லை.

"திருவார் பெருந்துறைச் செழுமலர்க்குருந்தின்
நிழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்தேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுரவாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத் தாதலின்
பொற்கலம் நிகர்க்கும் பூசுரார் நான்மறை
மட்கலம் நிகர்க்கும் மதுரவாசகம்
ஓதின் முத்தி யுறபயன்
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே"

என்பர் துறைமங்கலம் சிவப்பிரகாசர். பூ என்றால் தாமரையையே போலப் பாட்டு என்றால் திருவாசகமே. திருவாசகத்தில் நாம் கலந்தால் அது நமது ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கும் "நந்தாத் தேனாகும்" இறைபணிச் செம்மல் வை.செ.தேவராசா அவர்கள் எனக்கு அளித்த திருவாசக நூலில் காணப்பட்ட அகரவரிசையில் அமைந்த அரிய பொருளமைந்த தொடர்கள்.


அன்புமறையாய் போற்றப்பெறுவது திருவாசகம்
ஆசையைத் தவிர்ப்பது திருவாசகம்
இல்லங்களில் இருக்க வேண்டியது திருவாசகம்
ஈசனின் நேர்படைப்பே திருவாசகம்
உண்மையை உணர்த்துவது திருவாசகம்
ஊருலாவில் ஓதவல்லது திருவாசம்
எதையும் தரவல்லது திருவாசகம்
ஏற்பவர்க்கு ஏற்பதருள்வது திருவாசகம்
ஐயம் அறுப்பது திருவாசகம்
ஒப்பிலா மாணிக்கம் திருவாசகம்
ஓதிப் பயன் கொள்வது திருவாசகம்
ஔவியம் அகற்றுவது திருவாசகம்

**மணிவாசகர் திருவடி வாழ்க!!**

சிவம் என்ற சொல்லுக்கு துக்காதிகளைப் போக்குகின்றது என்பது பொருள். "ச்யதி துக்காதிகமிதி சிவா" ராத்திரி என்ற சொல்லுக் சுகத்தைச் செய்கின்றது என்பது பொருள். "ராதி-சுகமிதி-ராத்ரி" என்ற துக்கத்தை நீக்கிச் சுகத்தைச் செய்கின்ற இரவு சிவராத்திரி எனப்படும்.

# சிவராத்திரி

## வாரியார் விருந்து.



சிவ விரதங்கள் எட்டு, அவற்றுள் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி திதியன்று வருவது. அதிகாலையில் நீராடி திருநீறு அணிந்து உருத்திராட்சமாலை பூண்டு சிவபூஜை செய்து, திருஐந்தெழுத்து ஓத வேண்டும் பகல் முழுவதும் உபவாசம் இருத்தல் வேண்டும். மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயஞ் சென்று விழிபடவேண்டும். முடியுமானால் நெய்விளக்கு ஏற்றி மலரால் அர்ச்சனை செய்வித்து, உள்ளங் குழைந்து உருகி, தேவார திருவாசகங்களை ஓதித் துதிசெய்து, வலம் வந்து, அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்தல் வேண்டும்.

நான்கு காலங்களிலும் சிவபூஜை செய்ய வேண்டும். சிவ பூஜை செய்ய இயலாதவர்கள், நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொண்டு தரிசிக்க வேண்டும். நிரம்பிய அன்புடன் திரு ஐந்தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது. மறுநாள் காலை நீராடி வழிபட்டு பாரணம் புரிந்து விரத்தை முடிக்க வேண்டும். இங்ஙனம் புரிந்தோர்களுடைய சகல வினைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சுப்பொறிபோல் எரிந்து கரிந்து சாம்பராகும். பிரம்மனும், திருமாலும் நான் பிரமம் நான் பிரமம் என்று தருக்கமிட்டுப் போர் புரிந்தனர். அவர்கள் இடையே அடிமுடிய காணமாட்டாமல் ஒரு தாணு சோதிமயமாய் நின்றது. அப்படித் தோன்றிய நாள் தான் சிவராத்திரி. அக்காலம் மாசி மாதம் கிருஷ்ணபட்சம், சதுர்த்தசி திதி, சோமவாரம், திருவேணநட்சத்திரம் கூடிய புண்ணிய காலம் என்றறிக.

பிரமதேவனும், திருமாலும் துதிக்க அவர்கள் முன்னர் அத் தாணுவில் சிவமூர்த்தி உருவமாகத் தோன்றி யருளிய நேரம் இரவு 14 நாழிகைக்குமேல் என உணர்க. அவ்வாறு சகளீகரித்த சிவமூர்த்தி, மாலயனாதி வானவர் யாவர்கட்குந் திருவருள் புரிந்தனர்.

"இச் சிவராத்திரியன்று வழிபட்டோர்க்கு, நாம் எல்லா நலன்களையும் அருளுவோம்" என்ற சிவபெருமான் அருள் புரிந்தனர்.

இலிங்கோத்பவகாலம் என்ற 14 நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலத்தில், சிவபஞ்சாக்கரம் ஜெபிப்போர் எண்ணற்ற நன்மைகளை எளிதிற் பெறுவர்.

காலத்தில் செய்வதற்கு அதிக பலன் உண்டு.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி இத்தாற் செயின்.

என்பார் திருவள்ளுவ தேவர்.

காலத்திற் செய்கின்ற கருமங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி நன்மை செய்யும். "பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழியையும் உன்னுக. காலம் அறிதல் என்ற ஓர் அதிகாரமே அமைக்கின்றார் வள்ளுவர்.

ஆதலால் புண்ணிய விரத நாட்களில் செய்கின்ற தானத்திற்கும், ஜெபத்திற்கும் நிரம்பிய பலன் உண்டு. விரதங்கள் இருந்து, பெருமானை வழிபடுவது நம் நாட்டில் தொன்று தொட்டு வந்த பழக்கம். விரதாதிகளை அனுஷ்டிக்காதர்கள் நரகுறுவர் என்பர் அருணகிரிநாதர்.

"சூழ் விரதங்கள் கடிந்த குண்டர்கள்
வாதை நமன்றன் வருந்திடுங் குழி விழுவாரே"
-திருப்புகழ்

நதிகளில் சிறந்தது கங்கை. விண்மீன்களில் சிறந்தது கதிர், மரங்களில் சிறந்தது கற்பகம், தேவர்களில் சிறந்தவர் திருமால், பசுக்களில் சிறந்தது காமதேனு. யானைகளில் சிறந்தது

**33ம் பக்கம் பார்க்கவும்**

## திருத்தொண்டர் புராணம்
## சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்

# முதலைவாய் பிள்ளையை மீட்ட அற்புதம்

(இடைக்காடு சயம்பு)

வைத்தியகலாநிதி சு. வைத்தியலிங்கம்

சுந்தர மூர்த்தி நாயனார் திருவாரூரில் இருக்கும் போதுஒருநாள் சேரமான் பொருமாள நாயனாரைக் காண விரும்பினார். உடனே தலயாத்திரையாகப் புறப்பட்டு வழிபாடுகள் செய்து போயாக் கொண்டிருந்தார். திருப்புக்கொளியூர் என்னும் ஊரை அடைந்தார். அவிநாசியப்பர் கோயிலை நோக்கி அந்தணர்கள் வீதியால் போய்க் கொண்டிருந்தர். ஒரே அளவான செல்வச் செழிப்புத் தோன்றும் எதிரெதிராயுள்ள இரண்டு மனைகளில் ஒன்றில் மங்கல ஒலியும், வாத்தியங்களின் ஒலி, ஆட்களின் மகிழ்ச்சியான நடமாட்டம் ஆரவாரம் இவை விளங்க மற்ற மனையில் அழுகுரலும் அடக்கமும் வெறுமையுங் கண்டார் நாயனார். அது அவர் கவனத்தை ஈர்த்தது. சாதாரணமாகப் புறப் பொருள்களில் மனதைச் செலுத்தாது சிவநாமமே நினைவாகப் போகிறவர், இந்த முரணான நிகழ்ச்சிகள் எதிரெதிராய் நிகழ்வதால் அவருடைய கவனம் திரும்பிற்று. பின்னால் நிகழவிருக்கும் அற்புதம்-இறையருளால்-நயனார் மூலம் செய்விக்க வரும் பணி-இக்காரணத்தால் அவர் கவனம் இங்கு சென்றது. அங்குள்ளவர்களை அணுகி இப்படி இரண்டு மனைகளிலும் முரணான நிகழ்வுகள் ஏன் என்று விசாரித்தார். அந்தணர்கள் நாயனாரை அடையாளங் கண்டு கொண்டார்கள். நாயனாரை வணங்கிச் சொன்னர்கள்“அரிய புதல்வர் இருவர் ஐந்து வயது வந்தவர்கள் குளித்த மடுவிலே பிள்ளை ஒருவனை முதலை விழுங்கிவிட்டடது. தப்பிப் பிழைத்து



வந்தபிள்ளைக்கு இன்று பூணூல் சடங்கு நிகழும் மனை இது. மற்று ஒரு பிள்ளையை இழந்தாரது அழுகை அந்த மனையில நிகழ்வது” என்று இவ்வேளை அழுதுகொண்டிந்த வீட்டுக்காரரும் நாயனாரை அடையளங் கண்டு கொண்டார்கள். உடனே தங்கள் அழுகையை நிறுத்திச் சோகத்தை மறைத்து நாயனார் காலில் வீழ்ந்து வணங்கினார்கள். இந்தத் தம்பதிகள் நெடு நாட்களாக நாயனாருடைய பக்தர்கள். அவரைக் காணாமலே அவரை ஞானகுருவாய் மதித்திருந்தனர். இப்போது அவரே வந்து முன் நிற்கிறார்!. அதிசய மகிழ்ச்சியுடன் வீழ்ந்து வணங்கினர்கள். நாயனர் பரிவுடன் “மகனை இழந்த பொற்றோா நீங்களோ? என வினவினார். பதிலாக அவர்கள் கூறியது சுவாமி அந்த நிகழ்ச்சி இரண்டு வருடங்களின் முன் நடந்து கழிந்தது. அது நிற்க. நாம் தேவரீரைத் திருவாரூரிலே வந்து வணங்க விரும்பி இருந்தோம். அது வாய்க்கவில்லை. இப்போ எங்கள் அன்பு ஆசை வீண்போகாமல் சுவாமி இங்கு எழுந்தருளும் பேறு பெற்றோம். என்று மீண்டும் வணங்கினர். நாயனார் மிகவும் இரங்கி-புத்திர சோகத்தை மறந்து தானிங்கு வந்தற்குப் பெருமகிழ்ச்சி அடைந்தாரே என்று பெருமைப்பட்டு அல்ல அவர் இரங்கியது-அவர்களுடைய அன்பை உணர்ந்து பிள்ளை இல்லாத குறையையும் உணர்ந்து இரங்கினார். அதனாலே கூறினார் “அந்தப் பிள்ளையை முதலை மூலம் அழைப்பித்துக் கொடுத்துவிட்டுத்தான் அவிநாசியப்பரைத் தரிசிப்பேன்” என்றார். யான் அழைத்துக்

கொடுப்பேன் என்றது அகங்காரத்தினால் அல்ல இறைவன் மூலமாக என்பது தான். அவர் பாடிய இத்தலத்துப் பதிகப் பாடல்கள் தோறும் இத்தலத்து இறைவனை அழைத்துப் பணிவவைத் காணலாம். முதலை சிறுவனை விழுங்கிய மடு எங்கே என்று கேட்டு அறிந்து உடனே அங்கு போய்த் திருப்பதிகம் பாடத் தொடங்கினார்.

முதலாவது பாடலிலே "என்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே" என்று தனது பிறழாத அடிமைத் திறத்தைக் கூறி வணங்கினார். இரண்டாவது பாடலில் கூறினாா. "அந்தச்சிறுவன் செய்தபிழையாது? அவன் மறைந்தது உனக்கு அழகாகுமா?" என்று மூன்றாவது பாடலில் தனக்குத் தவநெறி வேண்டினார். நான்காவது பாடலை எடுத்தார் நாயனார். இதுதான் உயிர்ப்பித்த பாடல் இதன் பொருளை முழுமையாயப் பார்ப்போம்.

உரைப்பர் உரை உகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாய
அரைக்காடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே

சிவ மூலமந்திரத்தின் பொருளை தலை உச்சியிலும் அதற்கு மேலும் வைத்துத் தியானிக்கும் யோகிகளைக் குறிக்கிறார். முதலடியில் அப்படித் தியானிப்பவர்களின் உச்சியில் நீ இருப்பாய்.

பாம்பை அரையிற் கச்சாக அணிந்தவனே.

முதலும் முடிவும் ஆனவனே.
பெரியசோலை சூழ்ந்த புக்கொளியூர் கோவிலையுடைய அவிநாசியப்பபனே.

காலனை ஏவி முதலை மூலம் அந்தச் சிறுவனை மீட்டுத்தரும்படி செய்.

பாடலை இப்படி அமைத்து இறைவனை வேண்டினார் நாயனார். இந்தப் பாடல் முடிந்ததும் முடியாததுமாக முதலை ஏழவயதுப் பிராயத்துச் சிறுவனை-அதே பையனை உமிழ்ந்து விட்டது.

உருகி நின்ற தாய், முதலை உமிழந்த பிள்ளையை ஓடி எடுத்து நாயனார் பாதங்களில் பிள்ளையுடன் வீழ்ந்து வணங்கினாள். தகப்பானாரும் வீழ்ந்து வணங்கினார். தேவர்கள் பூமாரி சொரிந்து ஆசீர்வதித்தார்கள். அந்த ஊர் அந்தணர்கள் வேதமோதி ஒலித்துச் சால்வைகளைப் பறக்கும்படி மேலே எறிந்து குதூகளித்தனர். நாயனார் சிறுவனை அழைத்துக்கொண்டு கோயிலுக்குப் போய்ப் பணிந்தார். அங்கு திருப்பதிகத்தின் மிகுதி ஆறு பாடல்களையும் பாடி நிறைவு செய்து கோயிலை வலம் வந்து வழிபாடுகளை முடித்தார்.

நாயனர் மீண்டும் ஊருக்குள் அடியவர் சூழ வந்தார். இந்தப் பையனுக்குப் பூணூல் சடங்கைச் செய்வித்தார். ஆசீர்வதித்தார். தனது யாத்திரையைத் தொடர்ந்தார்.

**சுந்தரமூர்த்தி நாயனார் சேவடி வாழ்க!!**
**திருச்சிற்றம்பலம்**

கலசம் வாசகர்கள் கலந்து கொள்ள -
கீழ்கண்ட பாடல் சொல்லும் கருத்தை ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் எழுதி அனுப்பவும்.
சிறந்த ஆக்கம் அடுத்த கலசத்தில் வெளியிடப்படும்.

முதற்சங்கம் அமுதூட்டும் மொய்குழலார் ஆசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் கடைச்சங்கம்
ஆம்போ ததுஊதும். அம்மட் டோ? இம்மட்டோ?
நாம்பூமி வாழ்ந்த நலம்.

இறைவனால் நமக்கு கொடுக்கப்பட்ட அற்புத பொக்கிஷம் மனிதப்பிறப்பு. எல்லா விடயங்களையும் அறிந்து, தெரிந்து பார்த்து, சுவைத்து, நுகர்ந்து, கேட்டு, உணர்ந்து, மகிழ்ந்து, பூரணத்துவமாய் வாழக்கூடிய பிறப்பாகும்.
இந்த மனித் வாழ்வில் இத்தனை சுகங்கள் இருந்தாலும் செயற்பாட்டில் எல்லோரும் ஒரே சீரான வாழ்வு வாழ்கின்றோமா? ஒருவருடைய வாழ்வு ஏற்றமாயும், இன்னொருர் வாழ்வு இறக்கமாயும் இருக்கின்றதே ஏன்? முயற்சி திருவினையாக்கும். உழைப்பு உயர்வுதரும் போன்ற பொன்மொழிகள் அனுபவ ஒன்பது வாசல் வைத்தாய் ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்'' என்பது அப்பர் சுவாமிகள் தேவார வாக்கு. இந்த ஒன்பது வாசல் எனப்படும் மனித உடலின் உறுப்புகள் போலவே எம்மைச் சூழ்ந்துள்ள ஒன்பது கிரஹங்களுமாகும். இவை நமது வாழ்வியலின் நீதிபதிகள். நாங்கள் யாருக்கும் தெரியாமல் எத்தனை விடயங்களை செய்வோம், வெளியுலகில் நல்லவர் என்ற மகுடத்துடன் வாழ்பவர்கள் மறைமுகமாக செய்யும் செயல்கள் யாருக்கும் தெரிவதில்லை. ஆனால் இறைவன் மனசாட்சி மூலமாக கேள்வி கேட்டுக்கொண்டேயிருப்பார். அத்தோடு நாம்

# சோதிடமும் மனித வாழ்வும்

"கலாநிதி'' துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்
சாரதாபீடம் ஜேதிடநிலையம்

வாழ்க்கையின் மந்திரங்கள். இருப்பினும் முயற்சிக்கு ஏற்ற பலனோ? உழைப்பிற்கு ஏற்ற ஊதியமோ? எப்பொழுதும் கிடைப்பதில்லையே ஏன்? மனிதனுடைய அறிவியல் வளர்ச்சி மிகவும் உன்னதமாக வளர்ந்து மேலோங்கி இருக்கின்றது. உலகத்தை உள்ளங்கையில் கொண்டு வருகின்ற நிலையில் அத்தனை விடயங்களும் விஞ்ஞான வளர்ச்சிக்கு மூலமாக நாம் காணமுடிகின்றது. இருப்பினும் "சுனாமி'' போன்ற இயற்கை அழிவுகளின் மூலமாக மனிதன் கதிகலங்கி போய் நிற்கின்றான். இப்படியான ஒரு பேரழிவை தடுக்க மனிதனால் முடியவில்லை. அங்கேதான் இறைவன் வகுத்த காலநிர்ணயம் எமக்குப் புரிகின்றது. எம் வாழ்வியலுடன் வழிகாட்டியாக அமைவது ஜோதிடம். "பிறப்பில் இருந்து இறப்புவரை'' எமது வாழ்வின் மனசாட்சியாக இந்த ஜோதிடம் எம்மோடு தொடர்கின்றது. அனுபவத்தில் நாம் காணுகின்ற காட்சிகள் எல்லாம் ஜோதிடரீதியாக ஒப்பிட்டு பார்க்கின்றபொழுது ஆச்சரியத்தில் விழி உயர்த்துகின்றோம். வாழ்வில் நம் முன்னோர்கள் வகுத்த மரபுகள். வழிமுறைகள். அனைத்துமே. தாம் பூரணமாக கண்ட அனுபவ உண்மைகளை நெறிப்படுத்தி இருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது. ஜோதிடம் ஒரு மனிதனின் வாழ்வில் எந்த வகையில் நன்மை தருகின்றது. எந்த வகையிலே துன்பம் தருகின்றது. என்கின்ற நிலையை எத்தனைபேர் சிந்தித்திருக்கின்றோம். அதற்கு அமைய நாம் எம்மை வழிப்படுத்தி செயற்பட்டிருக்கின்றோமா? "ஒண்ணுள்ளே செய்யும் செயலுக்கு ஏற்ப பலாபலன்களை கிரஹகோள்களின் மூலமாக நமக்குத் தருகின்றார். இவை வாழ்வில் நாம் நன்றாக காணக்கூடிய செயற்பாடு ஒரு மனிதனுடைய குணாதிசயங்கள் அனைத்தும் ஜனன ஜாதகம் மூலமாக நன்கு தெரிந்து கொள்ள முடியும். அதே போல் ஒருவருடைய வாழவில் பிரச்சனை, சிக்கல்கள், அடிக்கடி அமைகின்றபொழுதும். அதற்குரிய நிலையை சோதிடம் மூலமாக அறிந்து கொள்ளலாம். வாழ்க்கையில் பிரச்சனைக்குள் உட்பட்டவர்களின் ஜாதகங்களை ஆராய்கின்ற பொழுது அதன் தெளிவு புலனாகும். குறிப்பாக குடும்ப வாழ்வில் பிரச்சனைகள் எப்படி அமைகின்றது. எனும் நிலையை திருமணப் பொருத்தம் பார்க்கின்ற பொழுதே சரி செய்து நிவர்த்திக்கலாம்.

### குடும்ப வாழ்வும் குழப்பநிலையும்

ஒருவருடை ஜனன ஜாதகத்திலே களத்திர ஸ்தானம் எனப்படுகின்ற ஏழாம் பாவம். குடும்ப நிலைக்கு உரிய இடமாகும். இந்த ஏழாம் பாவத்தின் அதிபதிக்கிரஹம் ஜாதக நிலையில் இருக்கின்ற ஸ்தான நிகைளை கொண்டு குடும்பம் அமையும் நிலைகளை அறியலாம். பொது அடிப்படையிலே நாம் பார்த்தோமானால் மகரம், கும்ப லக்னமுடையோர், கடகம், சிம்மம், லக்னமுடையோர் வாழ்க்கையில், பூரணத்துவமான சந்தோஷம் குடும்ப நிலையில் இருப்பதில்லை, காரணம் மகர, கும்ப லக்ன ஜாதகருக்கு ஏழாம் இடம், சந்திர சூரியர்

கிரஹங்கள் களத்திரகாரனாக அமைவதும் கடக, சிம்ம லக்ன ஜாதகருக்கு சனீஸ்வரர் களத்திரக்காரனாக அமைவதும் குடும்ப வாழ்வில் ஏதாவது ஒரு சோகம், குழப்பநிலை தொடர்ந்த வண்ணம் இருக்கும். அத்தோடு எந்த லக்னமாக இருப்பினும் களத்திரஸ்தானத்திற்கு உரிய கிரஹம் நீசம் பெற்று அமைந்தோ, அல்லது 6ஆம் 8ஆம் 12ஆம் 3ஆம் பாவங்களில் அமைந்திருந்தாலோ குடும்ப வாழ்வில் குழப்ப நிலைகள் தொடரும். அத்தோடு செவ்வாய் தோஷம் அமைந்தாலும் மேற் கூறிய பலன்கள் குடும்பத்தில் அமையும் இவற்றை விட பெண்களுக்கு சில நட்சத்திரங்கள் அமைவது மன வாழ்கையில் பிரச்சனைகள் கொடுக்கும்.

மகம், பூரம், சுவாதி, மூலம், சித்திரை, கார்த்திகை, பூசம், உத்தரம் 1ஆம் பாதம் ஆயிலியம் போன்ற நட்சத்திரங்களில் பிறந்த பெண்களுக்கு ஏதோ ஒரு வகையில் குடும்ப வாழ்வில் சிக்கல், பிரச்சனை, குழப்பநிலை, என்பன அமைந்து விடும் பலன் உண்டு கிரஹ நிலையிலே சுக்கிரன் நீசம் பெற்று அமைவது குரு, சுக்கிரன், களத்திரத்திஸ்தான நிலைக்கு எதிராக சேர்க்கை பெறுவது என்பன குடும்ப வாழ்வில் சஞ்சலங்களைக் கொடுக்கும். எனவே ஒருவருடைய திருமணப் பொருத்தம் பார்க்கின்ற பொழுது தனியே பஞ்சாங்க நிலைகளில் உள்ள பொருத்தங்கள் மட்டும் பார்த்துவிடாது கிரஹநிலை மற்றும் நவாம்ச நிலை என்பனவற்றை துல்லியமாக ஆராய வேண்டும். களத்திரஸ்தானமாகிய 7ஆம் இடம். செவ்வாய் அமைவது போலவே. சூரியன், ராகு, கேது ஆகிய கிரஹங்கள் அமைவதும். சிறப்பான நிலையைக் கொடுக்காது என்பது ஜோதிட கூற்று. ஏழில் சூரியன் அமைவது பற்றிய ஒரு பாடல்:

**சொல்லிடும் சப்தமத்தில் சூரியனிருந்தால் மானே**
**தொல்லைகளனுபவிப்பாள் துணைவனைப் பிரிந்துவாழ்வள்**
**அல்லலுமிகவுண்டு அடங்காத கோபமுண்டு**
**கல்மனதுடையாள் பாவை கலகமும் புரிவாள் தானே**
**(நூல்-சோதிட அரிச்சுவடி)**

எனவே செவ்வாய் தோஷம் போலவே சூரியன் நிலையும் நன்கு ஆராயப்படவேண்டும். இதே போன்று பொண்களுக்கு மாங்கல்ய ஸ்தானம் எனப்படும். எட்டாம் பாவம் நன்கு ஆராயப்பட வேண்டும். எட்டாம் இட கிரஹ அதிபதி மற்றும் 8ஆம் பாவம் அமையும் கிரஹம் என்பனவற்றின் தன்மைகள் ஆராய்வதன் மூலமாக மாங்கல்ய பலன் நிலைத்து நிற்குமா என்பதை நன்கு அறியமுடியும். திருமணப் பொருத்த நிச்சயத்தின் போது மாங்கல்யப் பொருத்த நிலையை நன்கு ஆராய்வது போலவே பெண்களின் மாங்கல்ய ஸ்தானம் எனப்படுகின்ற எட்டாம் பாவத்தையும் தெளிவாக ஆராய்ந்து பார்ப்பது மிகவும் முக்கியமாகும்.

அடுத்து குடும்பஸ்தானம் எனப்படுகின்ற 2ஆம் பாவம். அதற்குரிய கிரஹ நிலைகளின் தன்மைகளை அறியவேண்டும். மாங்கல்ய ஸ்தானம் என்கின்ற 8ஆம் பாவம் பெண்களின் மாங்கல்ய பலனை நிர்ணயிப்பதாக அமைகின்றது. 8ஆம் பாவத்திற்கு உரிய கிரஹம் அமையும் கிரஹஸ்தான நிலை. மற்றும் எட்டாம் இடத்திலே அமையும். கிரஹம் போன்ற நிலைகளின் மூலமாக மாங்கல்ய ஸ்தான நிலையை அறியலாம்.வாக்குஸ்தானம் எனப்படுகின்ற குடும்பத்தின் நிலைப்பாடு 2ஆம் பாவத்தில் உள்ள கிரஹத்தின் ஸ்தான நிலையும், அந்த பாவத்திலே அமைகின்ற கிரஹ நிலையையும் பொறுத்து அதற்குரிய பலன்கள் அமையப் பெறுகின்றது. எனவே குடும்ப வாழ்விலே அமைகின்ற குழப்ப நிலைகளுக்கு ஒரு ஜனன ஜாதகத்திலே 2ஆம் பாவம், 4ஆம் பாவம், 7ஆம் பாவம், 8ஆம் பாவம் போன்ற கிரஹ நிலைகளையும், அதன் கிரஹங்களின் பரிவர்த்தனங்களையும் ஆராய்ச்சி செய்வதன் மூலம் நம் வாழ்வில் பல துர்க்குண பலாபலன்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பது மெய்.

## கல்வியும் உயர்நிலையும்

ஒருவருடைய ஜனன ஜாதகத்திலே கல்வி மேன்மை அறிவதற்கு சுகஸ்தானம் எனப்படுகின்ற நான்காம் இடம் முக்கிய நிலை பெறுகின்றது. அத்தோடு வாக்குஸ்தானம் எனப்படுகின்ற 2ஆம் இடமும் அதன் கிரஹ நிலை ஆதிபத்திய கிரஹம் 2ஆம் இடம் அமையும் கிரஹம் என்பனவற்றின் நிலை முக்கியமாகின்றது. பொதுவாக ஜாதக கிரஹங்களில "புதன்" வித்தியாகாரகன் என்கின்ற சிறப்புப் பொறுகின்றார். ஜாதக கிரஹ நிலையில் புதன் அமைகின்ற ஸ்தானம் சிறப்பானதாக இருந்து புதனின் நிலை ஆட்சி உச்சமாக அமையப் பெறின் உயர் கல்வி அமையும் யோகம்முண்டு. அதே போல் குருவும் கிரஹ நிலையில் கல்விக்கு உரிய ஸ்தான நிலைகளிலே அமைந்து சுபபார்வை கல்வி நிலையை பார்த்து ஆட்சி உச்சம் பெற்று

**29ம் பக்கம் பார்க்கவும்**

# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007



திருமுறை பாடுகிறார்
ஜனனி சுரேஷ்



பிரதம விருந்தினர் திருமதி ஓமனா கங்காதரனை வரவேற்றல்



சங்கப் பெண்மணிகள்
30 மங்கல விளக்குகளை
ஏற்றி வைக்கிறார்கள்



# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007



சங்கப் பெண்மணிகள் 30 மங்கல விளக்குகளை ஏற்றி வைக்கிறார்கள்





30 ஆவது ஆண்டுநிறைவு விழாவிற்கு வருகை தந்த அன்பர்னள் ஆதரவாளர்கள்



# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007



30 ஆவது ஆண்டுநிறைவு விழாவிற்கு வருகை தந்த அன்பர்னள் ஆதரவாளர்கள்



30 ஆவது ஆண்டுநிறைவு விழாவிற்கு வருகை தந்த அன்பர்னள் ஆதரவாளர்கள்



# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007

30 ஆவது ஆண்டுநிறைவு விழாவிற்கு வருகை தந்த அன்பர்னள் ஆதரவாளர்கள்





மௌன அஞ்சலியின் போது





சைவப் பெரியார் திரு. மு. சிவராசா அவர்களுக்கு சைவ நெறிச்சீலர் எனும் பட்டம்ளித்துகநாம் கௌரவித்து போது

# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007



நால்வர் தமிழ்க் கலை நிலைய சங்கீத ஆசிரியர் திருமதி சுகிர்தகலா கடாட்சம் அவர்களின் மாணவாகள்



நால்வர் தமிழ்க் கலை நிலைய வீணை ஆசிரியர் திருமதி செந்தில் செல்வி வாமனானந்தன் அவர்களின் மாணவாகள்



நால்வர் தமிழ்க் கலை நிலைய மிருதங்க ஆசிரியர் திரு. அ. சோசுந்தர தேசிகர் அவர்களின் மாணவர்கள்



நால்வர் தமிழ்க் கலை நிலைய வயலின் ஆசிரியர் திருமதி சுகிர்தகலா கடாட்சம் அவர்களின் மாணவர்கள்

# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007




நால்வர் தமிழ்க் கலை நிலைய பரத நாட்டிய ஆசிரியர் திருமதி. ரஜி மோகனராஜ் அவர்களின் மாணவர்களின தீப நடனம்



நால்வர் தமிழ்க் கலை நிலைய பரத நாட்டிய ஆசிரியர் திருமதி. ரஜி மோகனராஜ் அவர்களின் மாணவர்களின தீப நடனம்






சைவ முன்னேற்றச் சங்க யோக நிலைய மாணவர்கள் உரையாற்றுகின்றார்கள்




சைவ முன்னேற்றச் சங்க யோக நிலையம்- யோகி இராம். சுநரலிங்கம் உரையாற்றுகின்றார்


# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007





கலசம் மாணவர் சமய அறிவுப் பரிசளிப்பு





நால்வர் தமிழ்க்கலை நிலைய மாணவர்கள் ஈழம், சிவபூமி பணிகளுக்கு திரட்டிய நிதி கையளிப்பு




நால்வர் முதயோர் நிலைய அங்கத்தவர்களின் நாடகம்

# முப்பதாவது ஆண்டுவிழாக் காட்சி 6.10.2007



சங்கத்தின் சைவக்குருக்கள்
திரு.வைத்தியநாதன்
அவர்களைப்
பாராட்டியபோது...

ஆண்டுவிழாவில் தொண்டாற்றிய சில மாணவர்களுடன் தலைவரும் செயலாளரும்



**புகைப்பட தந்து உதவியவர் அன்பிற்குரிய சித்தா அவர்கள்**

20ம் பக்கத் தொடர்ச்சி........

அமைந்தால் கல்வியில் சிறப்பான மேன்மைகள் அமையும். இவ்விரு கிரஹங்களின் நிலை சிறப்பாக அமையாத நிலையில் கல்வி நிலையில் உயர்கல்வி அமைவது சிரமமானதாகவே இருக்கும். அத்தோடு ஞானகாரகன் எனப்படும் கேதுவின் நிலையும் இங்கு நோக்கப்பட வேண்டிய தொன்றாகும். மேற்குறிப்பிட்ட கல்விக்கு உரிய நிலைகளில் கேதுவின் ஆதிபத்தியம் சிறப்பாக அமையும் நிலையில் கல்வியில் மிகவும் சிறப்பான மேன்மை அமைகின்றது. அதிலும் முக்கியமாக மருத்துவத்துறை சம்பந்தமான கல்விக்கு கேதுவின் நிலை முக்கியமானதாக அமையும். உதாரணமாக உயர்கல்வியில் மேன்மை பெறக்கூடிய ஜாதகம் என்றால் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவை லக்கினங்கள் அமையப்பெறும் ஜாதகங்களுக்கு உயர்கல்வி பட்டப்படிப்பு அமைகின்ற யோகம் உண்டு. இருப்பினும் இந்த லக்ன அதிபதி மறைவு ஸ்தானத்தில் அமைந்தாலோ அல்லது நீசநிலை பெற்றாலோ உயர்கல்வி நிலை அமைய பலன் இல்லை. எனவே கல்வி நிலைக்குரிய சிறப்புக்கள் மேற் குறிப்பிட்ட ஸ்தான நிலைகளிலும் கிரஹங்களிலும் அமைந்திருக்கின்றது.

## தொழில் நிலையும் மேன்மையும்

ஜாதக ரீதியில் அமைகின்ற தொழில் நிலை பற்றிய விடயங்களை அறிவதற்கு ஜனன ஜாதகத்தில் அமையும் 10ஆம் இடமாகிய ஜீவனஸ்தானம் எனப்படும் ஸ்தான நிலையில் அறிய வேண்டும். பொதுவாகவே தொழில் ஸ்தான நிலையை சனி, ராகு, கேது போன்ற கிரஹங்களின் பார்வை அமையப்பெறின் தொடந்து ஒரே இடத்தில் தொழில் புரிவது சற்று கஷ்டமான நிலையாகும். அடிக்கடி தொழில் நிலையில் மாற்றங்கள் அமையும் பலன் இருக்கும். பொதுவாக தொழில் ஸ்தான அதிபதிக்கிரஹம் ஜென்ம லக்கனத்தில் அமைந்தால் ஸ்திரமான நிலையான தொழில் இருக்கும். அதேபோல் தொழில் ஸ்தான நிலையில் சூரியனின் ஆதிபத்தியம் அமையப் பெறும் நிலையில் அரசாங்கத் தொடர்புடைய தொழில் நிலை அமையும். குருவின் நிலை அமைந்தால் உயர்வான மதிப்பான சமூக மேன்மையான தொழில் அமையும். சுக்கிரன் தொழில் ஸ்தான நிலையில் அமைந்தால் அல்லது தொடர்பு பெற்றால் வியாபார சம்பந்தமான தொழில் நிலை ஸ்தானத்தில் ஆதிபத்தியம் பெற்றால் கணிதத்துறை சம்பந்தமான தொழில் நிலைகள் அமையும். அதே நேரம் தொழில் ஸ்தான அதிபதிக்கிரஹம் மறைவுள்ளஸ்தானம் அல்லது நீசபங்க நிலைகள் அமைந்திருந்தால் தொழில் நிலைகளில் போராட்ட நிலை தொடரும் பலன்கள் உண்டு. அதுபோலவே தொழில் நிலையில் பாபக்கிரஹங்கள் அமைந்தாலும் தொழில் ஸ்தானம் மத்திமமாகவும் மந்தமாகவும் அமைகின்ற நிலைகள் ஏற்படும் தொழில் ஸ்தான நிலையை சுபக்கிரஹங்கள் கேந்திர ஸ்தானத்தில் இருந்து பார்வை பெற்றாலும் தொழில் ஸ்தான நிலை சிறப்புப் பெறும் அனுகூலம் உண்டு. பொதுவாக பாக்கியஸ்தான அதிபதி பஞ்சமஸ்தான அதிபதி போன்ற கிரஹங்களின் மஹாதிசை நடைபெறுகின்ற காலங்களில் தொழில் நிலையில் மிகவும் சிறப்பும் மேன்மையும் அமையும் நிலைகள் ஏற்படும்.

## யோக நிலைப் பலன்கள்

வாழ்க்கையில் ஒருவருக்கு அதிர்ஷ்டம் என்பது ஓர் அற்புத யோகம். இதை ஒவ்வொரு மனிதனும் ஆவலோடு எதிர்பார்ப்பது உண்டு. ஜாதக ரீதியிலே பலவிதமான யோகங்கள் உண்டு. அதிலே முதன்மையாக பேசப்படுகின்ற யோகம் "குருசந்திரயோகம்" ஆகும். குருவும் சந்திரனும் கேந்திர ஸ்தானங்களில் ஆட்சி உச்ச நிலையில் சேர்க்கை பெற்று அமைவது சிறப்பான யோகமாகும். எதிர்பாராத வகையிலே எல்லா விதச் சிறப்பும் ஜாதகர்க்குக் கொடுக்கின்ற அமைப்பும் இந்த யோகம் மூலமாகவே அமை கின்றது. அதே போல் மஹாதிசையில் சுக்கிரன் சிறப்பான கேந்திர நிலையில் யோகமாய் அமையப்பெற்று சுக்கிரனின் மஹாதிசை உரியவயதில் அமைகின்றபொழுது சுக்கிர திசையானது மிகவும் யோகமான நற்பலாபலன்களை கொடுத்து சிறப்பிக்கின்றது. இதை விட இன்னும் ஒரு சிறப்பு ஒருவர் பிறக்கின்ற திகதியின் எண்ணிற்கு உரிய கிரஹம் ஜாதக கிரஹ நிலையில் கேந்திர ஸ்தான நிலைகளில் அமைந்து ஆட்சி உச்சநிலை பெற்றாலும் சிறப்பான யோக பலன்கள் அமைகின்றது அந்த வகையில் ஜோதிடம் மனித வாழ்விற்கு வழிகாட்டியாகவும், பணம், புகழ், பெருமை, மேன்மை, உயர்வு போன்ற படி நிலைகளைத் தருவதாகவும் அமைகின்றது. சோதிடமும் மனித வாழ்வும் பிரிக்க முடியாத சக்திகளாக அமைந்திருக்கின்றன என்பது அனுபவ மெய்யாகும். -சுபமஸ்து-

# கண்ணதாசனின் சிந்தனைகள்:
# துன்பங்களில் இருந்து விடுதலை



அவன் பணக்காரனோ ஏழையோ, காசினி எங்கும் புகழ் பெற்றவனோ, காதவழி கூடப் பெயரில்லாதவனோ- எவனாக இருந்தாலும் அவனவன் உள்ளத்திலும் ஒரு நெருப்ப எரிந்து கொண்டே இருக்கிறது.

அந்த நெருப்பின் ஜ்வாலை கூடலாம், குறையலாம்-குறைந்த பட்சம் புகை மண்டலமாவது மண்டிக்கிடக்கிறது.

ஒவ்வொரு நெஞ்சிலும் ஏதேனும் ஒரு வடு விழுந்திருக்கிறது.

ஒரு வேளையாவது மனிதன் மூச்சு, அனல் மூச்சாக இறங்குகிறது. அவலம், ஆதங்கம், ஏக்கம் தோல்வி, குத்தல் குடைசல்.

ஒவ்வொரு மனிதனும், மரணத்தைப் பற்றி ஒரு முறையாவது சிந்திக்கிறான்.

"இதைவிடச் செத்துப்போவது நல்லது கடவுளே" என்று நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சொல்லியிருக்கிறார்கள்.

'போதுமடா சாமி' என்று அலுத்துக் கொள்ளாதவர்களே இல்லை.

'என்னை நிம்மதியாக இருக்க விடுங்களேன்' என்று ஒவ்வொரு குடும்பஸ்தனும் சத்தம் போட்டிருக்கிறான்.

நிம்மதி: அது தெய்வத்தின் சந்நிதி
துன்பம்: அது பேய்களின் சந்நிதி
பேய்களின் சந்நிதியில் இருந்து நீங்கள் தெய்வத்தின் சந்நிதிக்குப் போக விரும்புகிறீர்களல்லவா?

வாருங்கள்! உலகத்தின் மூலத்தைக் காண்பதற்கு முன்னால், துயரத்தின் மூலத்தைக் காணலாம். துன்பம் மொத்தத்தில் இரண்டு வகையாக வருவது. ஒன்று மனிதன் தானாகவே கை, கால்களை மாட்டி இழுத்துக் கொள்வது. மற்றொன்று, அவனுக்குச் சம்பந்தமில்லாமலேயே விதி விளையாடுவது.

இரண்டாவது வகையில் அவனுக்குச் சம்பந்த மில்லையாயினும், விதி அவன் மூலமாகவே செயல்படுகிறது. விளையாட்டிலே நீ கீழே விழுந்து காலை ஒடித்துக்கொண்டால், அது விதியின் செயல்தான். ஆனால், உன்னையே விளையாடச்சொல்லி, நீயாகவே விழுந்து கால் ஒடியும்படி அது வைத்துவிடுகிறது.

ஒரு பெண்ணை நீ காதலித்து, அந்தக் காதலே துயரமாகி விடுமானால், விதி உன் கண்களிலிருந்து விளையாடி இருக்கின்றதென்று பொருள்.

சரியான தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அது தவறானதாகிக் கையைச் சுட்டுக்கொள்ள நேருமானால், விதி உன் மூளையில் நின்று விளையாடி இருக்கிறதென்று பொருள்.

ஒவ்வொரு சிக்கலிலும் பின்னலிலும் விதியின் பங்கு பெரியது. நீ சாப்பிடும் சாப்பாட்டில் பல்லி எச்சமிட்டு நீ நோய் வாய்ப்பட நேர்ந்தால், உனக்குச் சம்பந்தமில்லாமல் விதி செயல்பட்டதாகப் பொருள்.

"இது என்ன செய்துவிடப்போகிறது" என்று ஏதாதொரு தவறான வழியில் நீ இறங்கி விட்டால் அதில் உன் செயல் முக்கால் பங்கு, விதி கால்பங்கு. ஆகவே ஒவ்வொரு துன்பத்திற்கும் ஒரு பின்னனி இருக்கிறது. அதனால் தான், புத்தி தாமதமாக உதயமாகியது.

இந்தத் துன்பங்களைக் களைவதற்கு வழி என்ன? ஒரே வரியில் சுலபமகச் சொல்வதென்றால், சித்தர்களும், ஞானிகளும் சொன்னது போல் பந்தம், பாசம், உடமைகள் அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு, 'வீடு நமக்குண்டு திருவாலங்காடு, நிமலர் தந்த ஓடுண்டு அட்சய பாத்திரம்'' என்று உடை கோவணத்தோடு ஓடிவிடுவதான் ஒரே வழி.

ஆனால் லௌகிகத்தில் இருப்பவனுக்கு இப்படியொரு யோசனையைச் சொல்வதை விட மடத்தனம் வேறு இருக்க முடியாது.

ஏற்படும் பிணைப்புகளை உறுதி செய்துகொண்டே நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்வதுதான், பயனள்ளதாக அமையும்.

மனிதன் அநுபவிக்க விரும்பும் பொருள்களில் இருந்து அவனை அப்புறப்படுத்துவதும் சுலபமான காரியமல்ல.

எல்லோரையும் அப்படி அப்புறப்படுத்தி விட்டால், உலக இயக்கங்கள் ஸ்தம்பித்துப் போகும்.

ஆகவே, வாழ்க்கை நடைமுறைகள் பற்றிய சில எச்சரிக்கைகளை- வலிமையான உள்ளத்தை அவனுக்குத் தந்து இன்பத்தோடு கலந்து வரும் துன்பங்களைக் களைந்தெடுக்க வழி காண்பதே நல்லது.

# டென்மார்க்கில்
# சைவத் தமிழ்ப் பண்ணாட்டுப் பேரவை
## Fyrrevænget.311 .7190 Billund Denmark

சைவத்தையும். தமிழையும் தன் இருகண்ணாக கொண்டு வாழ்ந்து வளங்கண்ட சைவத்தமிழ் மக்கள் தங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பெரும் அவலத் துடிப்பால் வாழ இடமின்றி வதைபடும் வாழ்வை விட்டு. அன்னிய நாடுகளில் அடைக்கலம் புகுந்தனர். நாம் வாழ்ந்து வரும் அகதிவாழக்கையில் எமது சமய சமூக தேவைகளில் அதி முக்கிய விடயங்களை செயல்படுத்துவதற்கோ, நடைமுறைப்படுத்துவதற்கோ, எமது ஏதிர்கால சந்ததியினருக்கு எங்களின் சமய சுமூக விழுமியங்களை சொல்லி, அவற்றை அழியவிடாமல் போணிப்பாதுகாப்பது எமது தலையாய கடமையாக தென்படுகின்றது.

சமய, சமூகம் சம்மந்தமான அதிமுக்கிய தேவைகளுக்கு முக்கியம் கொடுத்து செயற்படுவதற்கென ஒரு அமைப்பு முக்கியம் என சிந்தித்தனர்.
அவ்வாறு சிந்தித்த மக்கள் பணியாளர்களின் சிந்தனையில் உதித்ததே இந்த சைவத் தமிழ்ப் பண்ணாட்டுப் பேரவை எனும் அமைப்பு.

இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த ஆண்டு மார்கழி மாதம்
15-12-2007 அன்று மௌன அஞ்சலியோடு திரு ஆ. சங்கரலிங்கம் அவர்களின் திருமுறையுடன் சமயமுறைப்படி டென்மார்க் பில்லூண்ட் நகர நூல்நிலைய மண்டபத்தில் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறங்காவலரும், பொருளாளருமான உயர்திரு வ.இ..இராமநாதன் அவர்களின் அநுசரணையுடன் திரு வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் தலைமையில் நடை-பெற்றது. இக் கூட்டத்தில் எதிர்கால செயற்பாடுகளுக்கென பதினைந்து அங்கத்தவர்கள் கொண்ட செயல்பாட்டுக் குழுவினர் தெரிவு செய்யப்படனர்.

இவ்வருடம் 03..01.2008 சனிக்கிழமை மேற்படி மண்டபத்தில்
திரு வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் தலைமையில் மீண்டும் கூடிய சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் டென்மார்க் செயற்பாட்டுக் குழுவினர் தங்களின் எதிர்கால செயல்பாட்டுக்காக ஒரு நிர்வாக சபையை தெரிவு செய்தனர்.

தலைவராக:திருவேலணையூர் பொன்னண்ணா அவர்களையும். (பில்லூண்ட்)
உபதலைவராக திரு சொ. பேரின்பநாயகம் அவர்களையும். (கேணிங்)
செயலாளராக திரு தி. சிறிதரன் அவர்களையும் ( ஸ்கெனபோக்)
உப செயலாளராக திரு க குலசிங்கம் அவர்களையும் (கோர்சன்)
பொருளாளராக திரு.செ.சோதிராசா அவர்களையும் (பரடேசியா)
நிர்வாகத்துக்கு தெரிவு செய்ததோடு பத்து அங்கத்தவர்கள் கொண்ட நிர்வாகசபையையும் உறுப்பினர்களையும் தெரிவுசெய்தனர். இச் சைவத் தமிழ் பண்ணாட்டு பேரவை எம்மக்களின் சமய, சமூக தேவைகளை நிறைவு செய்வதோடு, எமது கலை கலாசார விழுமியங்களையும் போணிக்காக்கும் என்பது வெள்ளிடைமலை. தேனீர் விருந்துடன் கூட்டம் இனிதே முடிந்தது.

**வணக்கம்**
**செயலாளர்**

**"Know thyself" -Socrates (469-399 BCE)**
"தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்"- திருமூலர்

**"It is the mark of an educated mind to be able to entertain a thought without accepting it". - Aristotle (384-322 BCE)**
எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. -திருவள்ளுவர்



உ

பிள்ளையார் துணை

"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"

# இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்
# LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE

299-303 LEY STREET ILFORD ESSEX IG1 4BN
TEL/FAX:-020 8911 8934 E-Mail:-info@sriselvavinayagar.org.uk
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK

## சைவ முன்னேற்றச் சங்க 30ஆவது ஆண்டு நிறைவு விழா

பல சோதனைகளினூடே பயணம் செய்து ஒவ்வொரு அடியையும் சாதனைப் படிகளாக மாற்றி இன்று 30ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து, பூரிப்படைந்து நிற்கும் சைவ முன்னேற்றச் சங்கம் இன்னும் பல்லாண்டு காலம் நிலைத்து நின்று சைவத்துக்கும், தமிழிற்கும் தொண்டு செய்ய, எம்பெருமான் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் பேரருள் புரியவேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.

மேற்படி சங்கம் இப்படிப்பட்ட ஒரு பெரும் சாதனையைப் புரிவதற்கு அதன் தொண்டர்களின் தன்னலமற்ற தியாக மனமும், பெருமுயற்சியும் தான் காரணம் என்பதை மறுக்க முடியாது. இங்கு பார்த்தால் பலர் பேச்சளவில் பல சாதனைகள் புரிவதைப் பார்க்கலாம். "ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாதென்பர்" இந்த நிலையில் தங்களின் பொன்னான நேரத்தை சங்கத்தின் முன்னேற்றத்திற்காக ஒதுக்கி செயற்கரிய செய்து இன்று சிகரத்தை எட்டி நிற்கும் சைவ முன்னேற்றச் சங்க தொண்டர்கள் ஒவ்வொருவரும் மனமாரப் பாராட்டப்பட வேண்டியவர்களே.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்கு உலகமெல்லாம்" என்று தான் சொன்னர்கள். எமது ஊரைச் சொல்லவில்லை. விளங்குக உலகமெல்லாம் என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே சொல்லிவைத்தார்கள். என்னே அவர்களுடைய தீர்க்க தரிசனம்.

எமது மண்ணுக்கு வந்து எமது கலாசாரத்தை அழித்து, எமது சைவத் திருக்கேயில்களை இடித்து, எமது தெய்வவிக்கிரகங்களை எல்லாம் கடலில் தூக்கிப் போட்டு சைவசமயத்தையும், தமிழையும் அழிக்க முயற்சித்தவர்களின் நாட்டுக்கே வந்து அவர்களது தேவாலயங்களையே சைவத் திருக்கோயில்களாக மாற்றி அங்கே சைவத்தையும்,தமிழையும் வளர்த்தெடுக்கும் எம் உறவுகள் மேல் கொண்ட நம்பிக்கையையும், சைவத்தினதும் தமிழினதும் மேன்மையையும் கருத்தில் கொண்டு தான் அன்றே கூறிவைத்தார்கள். மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்று, அந்த வரிசையிலே இன்று உலகமெல்லாம் சைவ ஆலயங்களை அமைத்து சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுக்கும் பெருமக்கள மத்தியிலே, முப்பது ஆண்டுகளுக்கு முன்னேயே ஒரு சங்கம் அமைத்து சைவத்தையும், தமிழையும் சிறப்பான முறையில் வளர்த்தெடுத்து வரும் சைவ முன்னேற்றச் சங்கத்தையும், அதன் தொண்டர்களையும் பாராட்ட ஒரு நாளும் போதாது, ஒரு மடலும் போதாது, கோடானகோடி வருடங்காளாக கோடான கோடி மக்கள் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் தான் இறந்தபின்னும் மக்கள் மத்ததியில் வாழ்கிறார்கள். "சுயநலவாதி வாழும் போதே இறந்தவனாகின்றான் பொதுநலவாதி இறந்தபின்னும் வாழ்பவனாகின்றான்"

ஐய! நீவிர் உலகமுள்ளவரையும் வாழ்வீர்கள்,
வாழவேண்டும் என்று வாழ்த்தி அமைகின்றேன்

.

செல்வா

ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் -தர்மர்த்தா

*மன்னிப்புக் கோருகிறோம்.* சங்க ஆண்டு விழா மலரில் நாம் அச்சிடத் தவறிய வாழ்த்துச் செய்தியை இங்கு அச்சிட்டு மகிழ்கின்றோம். பிழைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்.

**சதாசிவம் ஆனந்ததியாகர்**

16ம் பக்கத் தொடர்ச்சி

ஐராவதம், மலரில் சிறந்தது தாமரை, புதல்வரிற் சிறந்தவர் குமரக்கடவுள், மலைகளில் சிறந்தது இமயம், இவைகளைப் போல் விரதங்களில் சிறந்தது சிவராத்திரி.

**சிவராத்திரியில் சிறந்த நேரம் இலிங்கோத்பவகாலம்.**

இலிங்கோத்பவகாலம் என்பது இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த நேரம் என அறிக. இராவு 11.30 மணிக்கு மேல் 1.00 மணி வரை எனவுணர்க.

சுத்த உபவாசம் இருக்க இயலாதவர்கள், பால் பழத்துடனாவது இருக்கலாம். இரவு முழுவதும் கண் விழிக்க இயலாதவர்கள், இலிங்கோத்பவ காலம் வரையாவது கண் விழித்து ஜெபம் புரிய வேண்டும்.

உபவாசத்தினால் உடல் நலத்திற்கும் வழியுண்டு. சதா உண்டு உண்டு வயிற்றை நிரப்புகின்றோம். உணவுகளை அரைத்து செரிக்க வைக்கும் கருவிகளுக்கு, மாதத்திற்கு ஒரு நாள், அல்லது ஆண்டிற்கு ஒரு நாளாவது பூரண ஓய்வைத் தரவேண்டாமா? அவ்வாறு தருவதால் மிகுந்த உடல் நலம் உண்டாகும். உபவாசத்திற்கு மறுநாள் உடம்பு மிக்க ஆரோக்கியமாக இருக்கும். இரண்டாவது, உணவு இன்றி உபவாசம் இருப்பதனால் மனம் முதலிய கருவிகரணங்கள் ஒடுங்கும். அதனால் தியானம் புரிய நிரம்ப வசதியுண்டு. நன்றாக செப தபம் புரியவும் இறைவனை ஒரு மனதுடன் வழிபடவும் முடிகின்றது. ஆதலால், உபவா-சத்தை எல்லோரும் சிவராத்திரியில் மேற்கொள்வது உத்தமம். தோசை, இட்டிலி, உப்புமா இவைகளைத் தின்று இருக்கிறது விரதம் ஆகாது. அது விரதமல்ல விரோதம்.

சிவராத்திரின்று விடையவராம் சடை முடியண்ணலை வழிபட்டு வரம் பெற்றோர் பலர். மற்றைய நாட்களில் ஆயிரம் பஞ்சாக்கரம் ஜெபித்த பயன், சிவராத்திரியில் ஒரு பஞ்சாக்கரம் ஜெபித்தால் வரும். இகபர நலன்களை எளிதில் தரவல்லது சிவராத்திரி.

*****

**கேள்வி- பதில்.**

**ஆசாரிய பருஷர்களும் மகான்களும் கூட, ஜுரம், உடல்வலி போன்ற உபாதைகளை அனுபவிக்கிறார்களே! அவர்களுக்கும் புற்றுநோய் போன்ற துன்பங்கள் தொடருகின்றனவே... அது எப்படி? அவர்கள் தமது சக்தியினால் அவற்றை நீக்கி கொள்ள முடியாதா?**

ஜகத் குரு ஆதிசங்கரர் இந்து மதத்துக்கே புத்துயிர் கொடுத்தவர். அவர் சிருங்கேரியில் இருந்த போது விஜயநகர மன்னன் அவரைத் தரிசிக்க வந்தான். அப்போது அசாரிய சுவாமிகளுக்கு மலேரியா ஜுரம் வந்த படுத்துக்கொண்டிருந்தார். ஆசிரமத்தை சேர்ந்தவர்கள் மன்னனிடம் 'நீங்கள் அவரைத் தரிசிக்க முடியாது அவரக்கு குளிர் ஜுரம் வந்திருக்கிறது.'' என்று சொன்னார்கள். அது உள்ளே படுத்திருந்த சுவாமிகளின் காதில் விழுந்து விட்டது. தனது சீடர்களில் ஒருவரை அனுப்பி மன்னனை அழைத்துவரச் சொன்னார். ஆசிரமத்தில் உட்காருவதற்கு ஆசனம் ஏதும் கிடையாது. வெறும் மரப்பலகையை மன்னனக்குப் போட்டு உட்காரச் சொன்னார்கள். எதிரே சுவாமிகள் உட்கார்ந்து கொண்டார். அவருக்காககப் போடப்பட்ட மணைப் பலகையை எடுத்துப் பக்கத்தில் போட்டுவிட்டார். அந்தப் பலகை சிறிது நேரத்தில் நடுக்கம் கொண்டு ஆடத்தொடங்கிற்று. சுவாமிகள் மன்னருடன் உரையாடி முடித்த பிறகு, கடைசியாக மன்னன், "சுவாமி ஒரு சிறு சந்தேகம், இவ்வளவு நேரமும் அந்தப் பலகை நடுங்கி ஆடியதன் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"எனக்கு வந்திருந்த காய்ச்சரை உனக்காக கொஞ்ச நேரம் அந்தப் பலகைக்கு மாற்றி வைத்திருந்தேன். அதனாலாயே என் உடலில் நடுக்கம் இல்லை. அந்தப் பலகை நடங்கிக்கொண்டிருந்தது.'' என்றார் சுவாமிகள். மன்னனுக்கு மிகுந்த அச்சரியம் உண்டாயிற்று.

"சுவாமி! பலகைக்க மாற்றி வைத்திருந்த தாங்கள் உங்களுக்காக அந்த உபாதையை விலக்கி வைத்துக்கொள் முடியாதா? என்று கேட்டான்.

சுவாமிகள் சொன்னார், "துறவியான பிறகு என்னைத் திருடச் சொல்லுகிறாயா மன்னா? சில கர்ம வினைகளை நான் ஏற்கனவே உருவாக்கியிருக்கிறேன். அதை நான் அனுபவித்தே தீர்க்க வேண்டும். அப்படி அனுபவிக்காமல் நான் என்னுடைய கர்மாவைக் கழிக்க நினைத்தால், இயற்கையின் விதியை மீறிய திருடன் ஆவேன். நல்லவையோ , தீயவையோ, அதன் பலனை ஒவ்வொரு மானுடனும் அனுபவித்தே ஆகவேண்டும். அதிலிருந்து மாற நான் விரும்பவேயில்லை.'' என்றார் ஆதிசங்கரர்.

**சுவாமி முத்தானந்தா**

# சமயமும் மனித அறிவும்

## திருமதி. சி.சிவசுகிர்தமலர்

சிருஷ்டியின் பின் தோன்றிய மனித ஜீவராசிகள் உட்பட எல்லா ஜீவராசிகளும் பரிணாம வளர்ச்சியடைந்தும், வளர்ச்சியடையாமலும் உயிர்வாழ்ந்து மறைந்துவிடுகின்றன. மனிதனைப் பொறுத்தளவில் உடல் அமைப்பு, உடற்கூறு தோற்றம் தவிர அவன் அறிவால் மட்டும் பரிணாம வளர்ச்சியடைந்து கொண்டிருக கின்றான். காலங்கள் யுகங்கள் கழிந்தாலும் மனிதனின் உடற்கூறு அமைப்பு, தோற்றம் ஒவ்வொரு சிருஷ்டியிலும் மாற்றமடைவதில்லை. ஏனெனில் இறைவன்தன் சித்தத்தால் உயர்ந்த பிறவியாக மனிதனை சிருஷ்டித்துள்ளார். மனித மூளையின் செயற்பாட்டு சக்தி எல்லையில்லாமல் நாலா பக்கமும் விரிந்து கொண்டு சென்று பரிணாம வளர்ச்சியடைகிறது. இதன் பயனே மனிதன் விஞ்ஞான அறிவை அதாவது சூட்சுமமாக மறைந்திருக்கும் விஞ்ஞான அறிவை வெளிப் படுத்திக் கொண்டிருக்கின்றான். மனிதனின் அறிவுதான், புலன் உணர்வுகளின் உதவியினால் தன்னைச் சுற்றியுள்ள சூழல், இயற்கையின் படைப்பையும் தன்னையும் உற்றுநோக்கி ஆராய்ந்து கொள்ள உதவுகிறது. மனிதனே நடுநாயகமாக இருந்து ஏனைய ஜீவராசிகள், உயிரினங்களின் மாற்றங்களை ஆராய்கின்றன்.

மனிதனின் அறிவுக்கு அறிவாக இருப்பது கடவுள் எனும் இயற்கைச் சக்தியாகும். கடவுள் தான் உலக உயிரின சிருஷ்டிக்கு காரணம் என அறிவினால் மனிதன் உணர்ந்து கொண்டான். தன்னையும் ஏனையவற்றையும் படைத்த அந்த சிருஷ்டிகர்த்தாவை பயபக்தியுடன் ஏற்றுக்கொண்டான். இதுவே, கடவுள் என்ற ஒரு சக்தி இருக்கிறது என்று உணர்ந்து மனிதன் பயபக்தியை வெளிப்படுத்துமுகமாக சமயம் தோன்றக் காரணமாகிறது. எவ்வாறு கடவுள் எல்லை யில்லாது பரந்தும் நீக்கமற சூட்சுமமாக மறைந்து இருப்பது போலவே அவ்வாறே சூட்சுமமாக இருக்கும் இறைவாக்குகள் (வேதம்) இயல்பாக தோன்றி வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த இறைவாக்குகள் இயற்கை நியதிகளாகும். இதுவே வேதம் எனக்குறிப்பிடப்படுகிறது. ஆதி அந்தமில்லாத கடவுளுடன் சூட்சுமாமக இருந்து வெளிப்பட்டதே இயற்கை நியதியாகிய வேதமாகும். வேதம் இயற்கை சக்தியாகிய கடவுளையும், ஆன்மாவையும் தொடர்புபடுத்தும் நியதியின் அறிவாகும்.

வேதம் இருவகைப்படும். வேத பூர்வம் (கர்மகாண்டம்), வேத அந்தம் (ஞானகாண்டம்) என வேதத்தின் இரு பிரிவுகளும் செயலையும், அறிவையும் பிரித்து உணர்த்துகிறது. கர்மம் செயலையும், அறிவு ஞானத்தையும் குறிக்கிறது. வேதபூர்வம் உலோகாதாய விடயங்களை விளக்குகிறது. தேவ அந்தம் என்பது வேதபூர்வத்தின் முடிவைக்குறிக்கிறது. அதாவது ஞானத்தைக் குறிக்கிறது. வேத பூர்வம் உலக விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட அறிவாகும். வேத அந்தம் உலக விவகாரங்களின் முடிவுக்கு வரும் ஞான அறிவாகும். உலகவிவகாரங்களுடன் சம்பந்தப் பட்ட அறிவு விஞ்ஞான அறிவாகும். விரி-வடைந்த விஞ்ஞான அறிவு குவிந்து முடியும் அந்தத்தின் அறிவு மெய்ஞானத்தின் அறிவாகும். மனிதன் படிப்படியாக அனுசரித்து வரும் சமயத்துடன் தொடர்புடைய ஆன்மிக செயற்பாடுகள், சமயக் கிரியைகள் மக்களிடையே வேறுபடுகிறன. ஏனெனில் வெவ்வேறு மதங்களாக மக்கள் பிளவுபட்டுள்ளார்கள். பொதுவாக ஆன்மிகம் என்பது சிருஷ்டித்த கடவுளுக்கும் மனித ஆத்மாக்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை குறிப்பதாகும். இந்த ஆன்மிக அறிவு மக்களிடையே ஒன்றாகவே உள்ளது. ஆனால் மதங்கள், என பிளவுபட்டுள்ளனர். ஆன்மிக அறிவு ஒன்றாக இருந்தபோதும் ஆன்மிக செயல்பாடுகள், கிரியைகள்தாம் வேறுபடுகிறது. இதுவே பல மதங்களாக தோற்றப்பாட்டை உண்டு பண்ணியுள்ளது. சமய செயற்பாடுகள், கிரியைகள் அனுட்டானங்களை சமயம் என்று கருதும் போதும் வேறுபாடு உருவாகிறது.

இறைவன் படைத்த மனிதனுக்கு உணர்வு பூர்வமான அறிவு உயிருள்ள வரைக்கும் இருந்து கொண்டேயிருக்கும். பொது அறிவு என எடுத்துக்கொண்டால், பலவகை அறிவின் சேர்க்கையே பொது அறிவு எனக்கொள்ளப்படும். முக்கிய அறிவாக விஞ்ஞான அறிவும் மெய்ஞான அறிவும் விளங்குகிறது. ஏனைய அறிவு வகைகள்

யாவும் விஞ்ஞான அறிவினுள்ளும் மெய்ஞான அறிவினுள்ளும் அடங்குகிறது. இயற்கையாம் கடவுள் விஞ்ஞான அறிவையும், மெய்ஞான அறிவையும் சேர்த்து மனிதனுக்கு அளித்துள்ளது. இந்த அறிவே மனிதனுக்குள் சூட்சுமமாக இருக்கும் உணர்வு பூர்வமான அறிவாகும். பிரபஞ்சத்தையும் உலகத்தையும், உலக வாழ்க்கையையும் ஆராய்ந்து அறிவைப் பரந்து விரியச் செய்வது விஞ்ஞான அறிவாகும். ஆனால் ஆன்மா கடவுள் தொடர்புடைய அறிவை ஆழ்ந்து சென்று உணர்வது மெய்ஞான அறிவாகும்.

மனித குலத்திற்கு மெய்ஞான அறிவு பொதுவாக இருந்தபோதும், கடவுள் வெவ்வேறு மனித அவதாரம் அவ்வப்போது எடுத்து இறைவனின் மகிமை, வல்லமை சக்தி என்பவற்றை அற்புதங்கள் மூலம் வெளிப் படுத்திய போதுதான் மதங்கள் தோன்றின. என உணரப்படுகிறது. கடவுள் மனித அவதாரம் எடுத்து தோன்றியிராவிட்டால் மனித ஆத்மாக்கள் இறைவனை உணரமுடியாமல், இயற்கையாக தோன்றியது போல இயற்கையாக வாழ்ந்து இயற்கையோடு மீண்டும் சேர்ந்த மறைந்துவிடும். மனித ஆத்மாவுக்கு இறைசக்தி இறைவன் இருப்பதை "உண்மையை" உணரவைப்பதற்காகவே கடவுள் அவதாரம் எடுத்து தோன்றியது. ஆனால் மனிதன்தான் ஓர் "உண்மையை" அதாவது "ஒருகடவுள்" "ஓர் உண்மை" என்பதை உணர்ந்துள்ளபோதும் மதம் என்ற பெயரில் பிரிக்க முடியாத கடவுளை (உண்மையை) பிரித்து மதங்களாக பிரித்திருப்பது மனித குலத்தின் அறியாமையாகும். மதப்பிரிவுகள் இருந்த போதும் ஆன்மா-கடவுள் தொடர்புடைய அறிவை வளர்த்து அனுட்டானங்கள் கிரிை-யகள் செய்து வருவதே சமயம் எனவும் பொதுவாக உணரப்படுகிறது. சமய அறிவு மனித குலத்தின் சீரிய வாழ்க்கையாகும். மனிதனுக்கு சமய அறிவு பக்தி இருந்தபோதும், வெளியுலக வாழ்க்கையில் மனித விழுமியங்களுக்கு முரணாகவும், நடக்க முற்பட்டாலும், நடந்தாலும் அவனது அறிவு சமநிலையில் இல்லாத பட்சத்தில் தனக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிப்பாதாக முடியும். இவ்வாறு மதங்களுக்கிடையே இணக்கமின்றி முரணாக நடந்தாலும் மதங்களுக்கும் அர்த்தமில்லாது போய் மனிதகுலம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்லும் எல்லா மதங்கள் அன்பு, காருண்யம், இரக்கம், சேவை இவற்றையே அடிநாதமாகக் கொண்டுள்ளன. "அன்பே தெய்வம்" என்பதே கடவுளின் அம்சமாகிய உண்மையும், வேதவாக்குமாகும். ஒரு கடவுள், ஓர் உண்மை, ஒரு சமயம் என்பதுதான் உண்மையின் உண்மை. ஆனால் மனிதன்தான் மதங்கள் தோன்றக் காரணமாகி விட்டான். எவ்வாறெனில் கடவுளின் மனித அவதாரம் வெவ்வேறு மனித குழுக்கள் மத்தியில் தோன்றியது காரணம் எனலாம். ஆதியிலிருந்த சரித்திர வரலாறு சாட்சியங்களாக இருக்கிறது. இந்த பரந்த உருண்டையான பூமிகிரகத்தில், கடவுள் ஒரு அவதாரம் மட்டும் எடுத்திருந்தால் மனிதகுலம் முழுவதற்கும் கடவுளின் அவதாரம் பற்றி சரித்திரம் தெரியாமல் போயிருக்கும். ஏனெனில் ஆதியில் மக்கள் தொடர்பு, போக்குவரத்து மிக அரிதாக இருந்திருக்கிறது. எனவே கடவுள் அறிவுபூர்வமாக அங்கும் இங்கும் அவதாரம் எடுத்தள்ளார். எனவே மக்கள் குழுக்கள்தாம் அவதாரக் கடவளின் பின்பற்றாளர்களாக மதம் தோன்றக் காரணமாகிவிட்டார்கள்.

உலகில் வெவ்வேறு மதங்கள் தோன்றியுள்ள போதும் ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் தங்கள் மதமாக அதன் சின்னம் வழிபாட்டுமுறை, உருவ வழிபாடு என பலவேறுபாடுகளை இயல்பாகவே தோற்றி விடுகிறார்கள்.

மனித குலத்தை மதங்கள் பிரித்தாலும் அவற்றால் அறிவைப் பிரிக்க முடியாது. எவராவது அல்லது எந்த மதத்தவராவது இது எங்கள் மதம் என்று சொல்வது போல இது எங்கள் அறிவு என்று ஒவ்வொரு மதத்திற்கும் பிரித்தாள முடியுமா? முடியாது ஏனெனில் அறிவு சூட்சுமமாக உணர்வு பூர்வமான அறிவுடன் சிருஷ்டியை இயங்கச் செய்து உயிரினங்களை இயங்கச் செய்வது போலவே மனிதகுலத்தில் அறிவு செயற்படுகிறது. எனவே அறிவு என்பது இறைவனின் அம்சம். அதாவது இறைவனின் பேரறிவுக் கடலின் ஒரு துளி. இறைவன், கடவுள், உண்மை என்பது ஒன்று அவ்வாறே அறிவும் என்பதும் ஒன்று. அதைப் பிரிக்கமுடியாது. ஒன்றை ஒருகாலமும் பிரிக்க முடியாது. ஒன்று ஒன்றாகவே நிலைத்திருக்கும். இரண்டாக, பலவாக இருப்பதையே பிரிக்கமுடியும். எனவே பிரிக்க முடியாத அறிவுதான் மனிதனினதும்,

அறிவு. கடவுள் ஆதியந்தமில்லாமலும், நீக்கமற நிறைந்து இருப்பது போலவே சூட்சுமமான அறிவும் ஆதி அந்தமில்லாமலும் நீக்கமற நிறைந்து இருக்கிறது. எனவே மனிதன் அறிவைப் பிரித்து இது என் அறிவு என சுட்டிக்காட்டவோ முடியாது. மேலும் விளக்குவதானால் இது என் மதம், இது எனது கடவுள், இது எனது அறிவு என சொல்வது அர்த்தமற்றது. எல்லா மதமும் சுட்டிக்காட்டுவது ஒன்றையே. எனவே மத இணக்கத்துடன் மக்கள் ஒன்றிணைந்து ஒரு கடவுள், ஓர் உண்மை, ஒருமதம் என உணரும் பட்சத்தில் உலகில் மதப்பிரிவினைவாதம், மதச் சண்டைகள் தலை தூக்காது. மதங்கள் வெவ்வேறாக தோன்றியிருந்தபோதும் மனித குலம் ஒன்று என்ற உணர்வுடன் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற உணர்வுடனும் வாழ்வார்கள்.

உலக அழிவை நோக்கிச் செல்லும் காரணிகள் குறைந்து முற்றாக நீங்கிவிடும். மனிதகுலம் வாழும் பூமியும் பாதுகாக்கப்படும். மனித ஆத்மா துன்பத்திலிருந்து விடுதலை அடையவே முனைகிறது. இந்த இயல்பு இயற்கை. இன்பமும், துன்பமும் கலந்த இரு தன்மையான இவ்வுலகில் இன்பத்தையும், துன்பத்தையும் மாறி மாறி உணரும் பட்சத்தில், நிரந்தர இன்பம் அதாவது துன்பம் தராத இன்பம் இல்லை என்பதை மனிதன் அறிவுபூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் உணருகிறான். மனிதன் தானாகவே அடிமையாகும் எல்லா வற்றிலும் இன்பமும் துன்பமும் கலந்திருப்பதை உணருகிறான். எனவே அவன் இந்த உண்மையை உணரும் பட்சத்தில் ஞான அறிவு ஏற்படுகிறது. இந்த நிலையே அவனை மெய்ஞான பாதைக்கு இட்டுச் செல்ல அவனது அறிவு உதவுகிறது. எனவே அவன் சமயத்தையும் விட்டுவிடுவது என்பது அல்லது எம்மதமும் சம்மதம் என்ற நிலைக்கு வருவது என்பது அவன் உண்மையை கடவுளை உணர முற்படும் நிலையே ஆன்மிகப் பாதையின் வழியாகும்.

மதங்கள் வெவ்வேறாக இருப்பதில் பிரச்சனை இல்லை. ஆனால் மக்கள் தம் மதம் போல ஏனைய மதங்களையும் மதிக்கவேண்டும். எவ்வாறெனில் தன் உயிரைப்போலவே ஏனைய உயிர்களும் என்ற உணர்வு வரப்பெற்றால், ஏனைய உயிர்களையும் நேசிக்கும் மனப்பான்மை இயற்கையாக அமையும். அது போலவே தம் மதத்தை மதிப்பது போலவே ஏனைய மதங்களையும் மதிக்கவேண்டும். ஆனால் தன் உயிர்போல மன்னுயிரை நேசிக்காத உணர்வே உலகில் துன்பத்திற்கு காரணம் அவ்வாறே மதங்கள் ஒன்றை ஒன்று மதிக்காத பட்சத்தில் மத மோதல்கள் ஏற்படவும் மனித துன்பங்களுக்கும் காரணம்.

நிற்க மதங்களை வீடுகளுக்கு ஒப்பிட முடியும். எவ்வாறெனில் மதமாகிய வீட்டில் மனித குழுக்கள் பிரச்சனையின்றி தங்கள்பாட்டில் மத வாழிபாடாகிய உயிர்வாழ்க்கையை வாழ்கிறார்கள். வீட்டில் வசிப்போர் வெளிவந்து வேறு வீடுகளில் வசிப்போருடன் சமூக ஒற்றுமையுடன் இருப்பார்கள். அவ்வாறே மதம் என்னும் வீட்டில் இருப்போருடன் சமூகரீதியில் வெளிவரும் பட்சத்தில் (தொடர்பு கொள்ளும் பட்சத்தில்) ஒற்றுமையுடன் இருக்கவேண்டும். இதுவே மத இணக்கத்துடன் வாழவேண்டிய வழி.

மனிதன் அவனவன் மதம் எனும் கூட்டில் இருந்து கடவுளைத் தேடி ஆன்ம ஈடேற்றம் அடையட்டும். ஆனால் மனித குலம் என்பது ஒரு பெரிய வீடாகிய பூமி கூட்டில்இருப்பதாகும். எனவே மனிதகுலம் ஒரு கடவுள், ஒரு நியதியின் கீழே இருக்கிறது. உலகில் பல மதங்கள் தோன்றியிருந்தாலும் உலக மக்களின் சுபீட்சத்திற்கும், பூமிக்கிரகம் அழிவைநோக்கி செல்வதை தடுப்பதற்கும், உலகமக்களின் ஒற்றுமையின் அவசியத்தையே வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. அதாவது மத வேற்றுமையிலும் ஒற்றுமை அவசியம் என்பதே எல்லோராலும் உணரப்பட வேண்டிய நிலையாகும். எதிர்கால சந்ததியின் வாழ்வு இன்றைய மனித குலத்திலே தங்கியிருக்கிறது. எனவே மனிதன் மதக்கோட்பாடுகள், சமய அனுட்டானங்களை உணர்வு பூர்வமான அறிவுடன் மேற்கொண்டு தன் ஆன்ம ஈடேற்றத்திற்கும், மனிதகுலத்தின் ஈடேற்றத்திற்கும் அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது சயமத்தை ஒரு கையிலும் அறிவை மற்றைய கையிலும் தாங்குவது போல சமய அறிவையும், ஞான அறிவையும் ஒரே சமயத்தில் தாங்கி ஏற்று இறைவன் காட்டிய வழியில் நடப்போமாக.

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**

# திருமந்திர உண்மை



அவர்கள் காத்திருந்தனர். ஞானியர் தியானத்தினின்று விழிப்பதற்கு. இப்போது எல்லாம் இதே வாடிக்கையாகப் போய் விட்டது. அவர் தியானம் கலைந்து விழித்தவுடன் தங்கள் குறைகளை, கேள்விகளை அவர்முன் வைத்து அவரது பதிலைப்பெற்று அமைதி அடைவது. ஏனென்றால் கண் விழித்த சிறிது நேரத்திலேயே ஞானி மீண்டும் ஞானத்தில் ஆழ்ந்துவிடுவார். அந்த சில மணித்துளிகளுக்காக மக்கள் காத்திருக்கத் தொடங் கினார்கள். ஞானி கண் விழித்தார். அனைரையும் ஒரு முறை கனிவோடு நோக்கினார். அவர் பார்வை ஒருவன் மீது நின்றது. அவன் அவரை வணங்கிக் கேட்டான் "சாமி கடவுளை எப்படி வழிபடுவதுன்னே எனக்குத் தெரியலை பெரிசா பூசை செய்யவோ படையல் வைக்கவோ என்னால முடியாது நான் என்ன செய்யனும் சாமி?""இறைவனை வழிபடுவதற்கு எந்த நியதியும் இல்லையப்பா. இதில் ஆடம்பரம் தேவையில்லை. நான் என்ற சிந்தையற்று ஆழ்ந்தபக்தியுடன் உள்ளம் நிறை அன்புடன் ஒரு இலையைப் போட்டு வணங்கு. வில்வமோ துளசியோ ஏதாவது ஒன்று அவன் திருப்தியடைவான். உன் பூசையை ஏற்றுக்கொள்வான்." ஞானி பதிலளித்தார்.

அவர் அடுத்தவனைப் பார்த்தார். அவன் கேட்டான் "சாமி நான் அதிக வசதியில்லாதவன் தருமம் செய்யணுன்னு ஆசை இருக்கு. ஆனால் கொஞ்சமா ஏதாவது செஞ்சா எல்லாரும் கேலி செய்வாங்களோன்று பயமாக இருக்கு. நான் என்ன செய்ய சாமி?"அவர் பதில் அளித்தார் "உனக்கு நல்ல மனது இருக்கிறது. ஈதல் என்பது பெரிதாக இருக்க வேண்டியதில்லை. நேற்று நீ இங்கு வரும்போது எதிர்ப்பட்ட ஒரு பசுவுக்கு ஒரு வாய் புல் அளித்தாயே அதுவும் ஒரு தர்மம்தான். நீ உண்ணும் உணவில் சிறிது பசித்தவருக்கு வழங்கினால் அது அறம் உண்ணும் முன் காக்கைக்குச் சிறிது அன்னமிட்டால் அதுவும் தருமம் தான்."அவர் பார்வை பட்ட அடுத்தவன் கேட்டான் "இதெல்லாம் கூட முடியலென்ன என்ன செய்ய?" கொஞ்சம் இடக்குப் பிடித்த அவனது கேள்வியைச் செவியுற்று அவர் புன்னகைத்தார். "ஊரில் எல்லோரும் உன்னை மிகவும் கோபக்காரன் என்று சொல்கிறாகள். பல நேரங்களில் நானே கவனித்திருக்கின்றேன். இனிமையாகப் பேசாமல் சுடு சொற்களையே பேசுவாயாகில் அதை விடுத்து அனைவரிடமும் இன்சொற்கள் பேசுவாயாகில் அதுவே சிறந்த அறம்தான். முகத்தானமர்ந்து இனிது நோக்கி அகத்தானம் இன் சொலினதே அறம்". இதைச் சொல்லிவிட்டு ஞானி மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.

"யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமார் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே" - திருமந்திரம்

நன்றி மதுரை சொக்கன்

# அபிராமி அந்தாதி -முதலாம் பாடல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித்திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே

உலகத்தின் இருளை அகற்றி அடியாரின் துன்பங்களை நீக்க வருகின்ற காலையில் தோன்றும் செம்மை நிறமான சூரியனின் ஒளியைப் போன்றவளே மிகஉயர்ந்த உன்னதமான நிலையைக் காட்டுகின்ற செந்தூரமாக திகழ்பவளே இறையுணர்வுள்ள தூயமனத்தோர் விரும்பிப் போற்றுகின்ற ஒளிவீசும் மாணிக்கம் போன்றவளே. அழகிய மென்மையான மாதுளம் பூ மலர் போன்றவளே செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் மகாலட்சுமியால் வணங்கப் படுகின்றவளே மின்னல் கொடிபோன்ற உருவம் உடையவளே குங்குப்பூ கலந்த புண்ணிய நீரில் அபிசேகிக்கப்படுபவளே இத் தகைய உயர்வான தோற்றம் கொண்ட அன்னையே இத்தன்மைகளால் என் கடிய உள்ளத்தில் நல்ல எண்ணங்களை உருவாக்க வல்ல அன்னையே திருக்கடவூரில் வீற்றிருந்து அருள் செய்யும் அபிராம வல்லியே நீ தான் எனக்கு உகந்த துணையாக இருப்பவள்.



# ஐம்பூதத்தின் குணம்

டாக்டர் ஆ.சே.விசாகரெத்தின்ம

கணக்கதாம் மயிர் எலும்பு கூடிய தோல் தசை நரம்பு
மிணக்கமாம் அப்புவின் கூறு இரத்தம் நீர் மச்சை மூளை
கணக்கில் சுக்கிலமாம், தேயுவின் குணமே தென்னில்
துணுக்கு மிற் பயம் ஆயாசம் மைதுனம் துஞ்சாமே

துஞ்சலின் வாய்வின் கூறு துள்ளி ஓடல் நடத்தல்
பஞ்சியாய்க் கிடத்தல் நிற்றல் பரிவுடன் இருத்தலாகும்
மிஞ்சுமாகாயக் கூறு மிக்க காமியம் குரோத லோபம்
வஞ்சியே மோகமாச்சரியம் வகையுடன் இவை ஓரைந்தே

இந்தப் பாட்டுக்களின் கருத்தை ஆராய்வோமானால், நமது உடல் ஐந்து வகைப் பூதிபங்களாலானது என்றும் அவை ஒவ்வொன்றிற்கும் ஐந்து வகைக் குணங்கள் இருப்பதாகவும் கூறி இருக்கிறார்கள். அது எப்படியெனில் (நமது உடலில்)

1) **மண்ணின் குணம்:** மயிர், எலும்பு, தோல், தசை, நரம்பு ஐந்தும் பதார்த்த வடிவில் இருக்கின்றன.

2) **தண்ணீரின் குணம்**: இரத்தம், நீர், மச்சை, மூளை, சுக்கிலம் இவை ஐந்தும் திரவ வடிவில் இருக்கின்றன.

3) **நெருப்பின் குணம்:** துணுக்கு, பயம், ஆயாசம், மைதுனம், துஞ்சல் இவை ஐந்தும் செயல் வடிவில் இருக்கின்றன.

4) **வாயுவின் குணம்:** ஓடல், நடத்தல், கிடத்தல், நிற்றல், இருத்தல் ஆகிய ஐந்தும் செயல் வடிவில் இருக்கின்றன.

5) **ஆகாசாத்தின் குணம்:** காமியம், குரோதம், லோபம், மோகம், ஆச்சரியம் ஆகிய ஐந்தும் உணர்வு வடிவில் இருக்கின்றன.

இப்படி ஐந்த பூதிபங்களுக்கும் 25 வகை குணங்கள் இருப்பதாகவும் அவற்றில் மண்ணின் குணங்கள் பதார்த்தமாகவும், நீரின் குணம் திரவமாகவும், நெருப்பினதும் வாயுவினதும் குணங்கள், செயலாகவும், ஆகாசத்தின் குணங்கள் உணர்வாகவும் இருப்பதாக மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இதை நாம் நன்கு அவதானித்தால், இதில் பூதிபங்களின் பரிசுத்த நிலைக்கு ஏற்பவே அவற்றின் குணநிலைகள் இருப்பதைக் காணலாம்.

## கந்தரலங்காரம் - முதலாம் பாடல்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப் பிரபஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே.

எந்த வகையான தகுதியும் இல்லாத தவம் ஏதும் செய்யாத என்னை இந்த உலகத்திலே துன்பம் நிறைந்த வாழ்க்கை நிலையிலிருந்து விடுவித்து மெய்யறிவு காட்டியவனே சிவந்த சடையின்மேல் கங்கையையும், பாம்பையும், மலரையும் தும்பையையும் பிறைச் சந்திரனையும் வைத்திருக்கின்ற சிவபொருமானுடைய சக்தியாகிய குமரப்பெருமானே- என்மீது அதீத தயவுள்ள கிருபை காட்டுகின்றவனே உன்னை வணங்குகின்றேன்.



## Competition questions for this issue: (Closing Date 22 February 2008 (Suggested age 9+)

## 10 Questions

1) இலண்டனில் 63 நாயன்மார்களின் உருவச்சிலைகள் உள்ள கோயில் ஒன்றின் பெயர் எழுதுக?
2) குருவாயூர் அப்பன் கோயில் எங்கே உள்ளது?
3) குருவாயூரப்பன் என்ற பெயர் வரக்காணம் என்ன?
4) திருவைந்தெழுத்து என்பதன் பொருள் என்ன?
5) திருநாவுக்கரசு நாயனார் எந்தச் சமயத்திலிருந்து எந்தக்கோயிலில் சைவசமயத்திற்கு மாறினார்
6) திருநாவுக்கரசு நாயனார் செய்த திருக்கோயில் தொண்டு என்ன?
7) மங்கலம் என்ப மனை மாட்சி என்ற திருக்குறளின் கருத்தை எழுதுக?
8) In which century did Thirunaavukarasu Nayanaar live?
9) Who are the four Saiva Saints?
10) How did the stories in 'Vikramathityan Kathagal' came about?.

---

**Questions may be asked from issue 50 onwards. Back issues are available on request. Please keep them safe.**

***All students who participate in this competition from Issue 57 are awarded 10 points each (per issue).***

***Your Name in English, Age, School and Tel. must be stated with the answers, please.***

**Prizes for**
**For 3 lucky winners...**

***1st Prize worth £25 !***

***2nd Prize worth £15 !***


***3rd Prize worth £10 !***

**( Free Gifts will be awarded to EVERYONE who writes correct answers!)**

The help of **parents** & teachers is **necessary** for this project.


**(All the answers can be found within this magazine itself)**

# மாணவர் அனுப்பிய சித்திரங்கள்









# மாதா பிதா குரு தெய்வம்

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். எங்களுடைய அம்மா, அப்பா, மற்றும் ஆசிரியர் கடவுளுக்கு மேலாக மதிக்கப்படுவார்கள். அவர்கள் இல்லாமல் நாங்கள் இங்கு இல்லை. எங்களை பத்து மாசம் சுமந்து பெற்றவள் தாய். அன்போடு எம்மை பேணி வளர்த்து ஆளாக்குபவள் அன்னை. தனது சிரமம் பாராமல் கண்விழித்து நாம் சிறிய குழந்தையாய் இருந்து, பெரியவர் ஆகும் வரை எமது ஒவ்வொரு அசைவிலும் தனது கவனிப்பு, கருத்துடன் எம்மை ஆளாக்க தன் முழு முயற்சியையும் எமக்காகவே அர்ப்பபணித்து செய்பவள் எமது அன்னை. அறுசுவை உணவும் எமக்களித்து எமது உடல் நலனில் எந்நேரமும் அக்கறை கொண்டு எந்த எந்த நேரங்களில் என்னென் தேவையோ அவற்றை உடனுக்குடன் செயற்படுத்துவாள். எமக்கு உடல் நிலை சரிய-ில்லாதபோது தனக்கே உடல் நிலை சரியில்லாது போல் மிகவும் கவலைப்படுவாள். எம்மை அழகுபடுத்துவதற்காக விதவிதமாக ஆடைஅணிகள் வாங்கித்தந்து நாம் அதை அணிந்த போது எமது சந்தோசத்தைப் பார்த்து தான்மிக்க சந்தோசமடைவாள். எமக்கு நல்லெண்ணங்களையும், நற்பழக்கவழக்கங்களையும், பெரியோரை மதித்தல், மற்றும் விட்டுக்கொடுத்தல், சகோதரர்களுடன் அன்பாக இருத்தல், அரவணைத்தல் போன்ற நற்பழக்க வழக்கங்களையும், எங்களுக்குச் சொல்லித் தருபவள் அன்னை. அன்னையைப் பற்றி எழுதுவதென்றால் எத்தனையோ விடயங்கள்இருக்கின்றன. எங்கள் அனைவருக்கும் அன்னை தான் முதற்தெய்வம். "தாயிற் சிறந்த கோயிலும் இல்லை" என்று ஆன்றோர் சொல்வார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலைவர் தந்தை. எமக்கு நல்ல பெயரும் சமூகத்தில் நல்ல மதிப்பும் ஏற்படுவதற்கு எமக்கு முக்கிய காரணம் தந்தை. குடும்பத்தை நல்ல வழியில் நடத்துவதற்கு குடும்பத்தலைவர் அவசியம். எமது தந்தை எமக்காக தனது சுகம் பாரமலும், அல்லும் பகலும் உழைத்து எமக்கு வசதியாகவும், நல்லகல்வி கிடைப்பதற்காகவும், நல்ல சூழலில் நாம் வளர்வதற்கும் எங்களைப் பெரியவர்களாக ஆக்குவதற்கும் தன்னை வருத்தி தனது உழைப்பின் மூலம் எங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தருபவர். எம்முடன் அவர் இருக்கும் நேரத்திலும் எம்மை கண்டிப்பாகவும் சில சமயம் அன்பாகவும் இருந்து எம்மைக் காத்து எமகது சிறந்த வழிகாட்டியாக இருப்பவர். என்ன தேவை ஏற்படினும் தனக்கு என்ன கஷ்டம் இருந்தபோதும் எமக்கு அதை சிறிதும் காட்டாமல் எம்மை மகிழ்வாக வைத்திருப்பது எமது தந்தை. எம்மை விடுமுறை காலங்களில் ஒவ்வொரு இடத்திற்கும் அழைத்துச்சென்று எம்மை சந்தோஷப்படுத்த தனது உழைப்பு முழுவதையும் எமக்காகவே செலவழிப்பவர். அது மட்டுமல்ல எமது எதிர்காலத்திற்குத் தேவையான தேவைகளைக் கூட செய்து முடிப்பதற்காக தன்னை வருத்தி எங்களுக்காகவே வாழ்பவர் தந்தை 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குரு எமக்கு இறைவனுக்கு சமமானர். தாய் தந்தையைப் போன்று போற்றப்படவேண்டியவர்கள். நாம் மனிதர்களாக வாழ கல்வியறிவு மிக அவசியம். நம் கல்வியற-ிவை வைத்துத்தான் நாம் சமுதாயத்தில் கணிக்கப்படுகின்றோம். சிறந்த கல்வியறிவு பெற்றிருந்தால் உலகத்தில் எந்த உயரத்திற்கும் போக முடியும். எந்தக்காலத்திலும் கை கொடுப்பது கல்வி. சிறந்த மனிதனை உருவாக்குவது அவனது ஆசிரியர். ஆசிரியர் தான் உலகத்தில் உள்ள எல்லா தொழில்செய்பவர்களையும் உருவாக்குபவர். ஆசிரியர்கள் இல்லையெனில் இயங்க முடியாது. நாம் வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்வதற்கு எமது ஆசிரியர்கள்தான் மூலகாரணம். ஆசிரியர்கள் எல்லோராலும் வணங்கப்பட வேண்டியவர்கள். எமது உயர்விற்கு முழுக்காரணமும் அவர்கள்தான். கல்வி என்னும் கண்ணை எமக்குத் திறப்பவர்கள். அவர்களின் உடல் உழைப்பையும் கற்பித்தல் மூலம் ஏற்படும் சிரமங்களையும், மாணர்வகளுக்கா அவர்கள் படும் சிரமங்களும் ஒவ்வொரு மாணவர்கள் மீதும் காட்டும் அக்கறையும் எமக்கு 'ஆசிரியர்கள் சேவையை அளவிடமுடியாது. எப்போதும் போற்றுதலுக்குரியவர்கள் எமது ஆசிரியர்கள் தான்.

மாதா, பிதா, குரு என்கிற எல்லோரும் எங்களுக்குக் கடவுள். எங்களுக்கு முன்னால் இருக்கும் தெய்வம் தான் அம்மா, அப்பா, மற்றும் ஆசிரியர் கண்ணுக்குத் தெரியாத கடவுள்தான் தெய்வம். தெய்வம் எங்களை எப்போதும் பார்த்துக்கொண்டு இருக்கும்

**செல்வி. இராகவி யோகராஜா**
**வயது14.**
**திருவள்ளுவர் தமிழ்ப்பாடசாலை**

# தைப்பொங்கல்

தமிழர் தம் பண்டிகை விழாக்களில் முதன்மைச் சிறப் பெறும் பண்டிகையாய் தைப்பொங்கல் அமைகின்றது. இறைவனுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய சந்தோச தொடர்பை ஏற்படுத்தும் நிகழ்வாய் விரதங்களும், விழாக்களும் அமைகின்றன. அந்த வகையில் தைபொங்கல் சூரியபகவானுக்கு நன்றி தெரிவித்து பூஜிக்கும் விழாவாகவும் உழவர் தம் மகிழ்வு பெருவிழாவாகவும் “தைப்பொங்கல்” எனும் பண்டிகை சிறப்புப் பெறுகின்றது.

நம் வாழ்வியல் நாம் கண்டு வாழும் மாதங்கள் பன்னிரெண்டு. அவற்றைச் சேர்த்து ஒரு வருடம் என வகுக்கின்றோம். இந்த வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகின்றது அந்த வகையில் “உத்தராயணம்” என்று சொல்லப்படுகின்ற ஆறு மாத காலம் தை மாதம் தொடக்கம் ஆனிமாதம் வரையான காலங்கள் தேவர்களின் பகற்பொழுதும் “தெட்சணாயனம்” எனப்படும் ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையான ஆறுமாத காலம் இரவுப் பொழுதுமாய் அமைகின்றது. எனவே இரவுப் பொழுதில் மறைந்து காலைப்பொழுதில் பொற்கதிராய் சூரியனை தேவர்களுகம் வரவேற்று உபசரித்து பூஜிப்பார்கள் என்பது உண்மை.



அந்த நாள் எமக்கு தைப்பொங்கல் திருநாளாய் அமைகின்றது. உலக வாழ்வியலில் உழவர் இல்லையேல் மனிதர் உயிர் வாழ முடியாது. உழவுத் தொழில் அத்தகைய தெய்விகம் பொருந்தியதாகும். அந்த உழவரின் பயிர் செழிப்பிற்கு திருவருள் தரும் தெய்வமாய் விளங்கும் சூரியபகவானுக்கு உழவர் தம் நன்றியை தெரிவிக்கும் விழாவாகவும் சிறப்புப் பெறுகின்றது. அனைத்து தமிழ்மக்களும் தைப்பொங்கல் திருநாளைப் புதுப்பொலிவோடு வரவேற்று கொண்டாடுகிறார்கள். எனவே நாம் தைப்பொங்கலை கொண்டாடி மகிழ்வோம். நன்றி

**துளசிஜா ஸ்ரீஸ்கந்தராஜா**
**இலண்டன் தமிழ் நிலையம்**
**ஆசிரியர்: திருமதி பிரபாகரன்**

# திருஞான சம்பந்தர்

இந்தியாவில் சீர்காழி என்னும் இடத்தில் சிவபாதவிருதயருக்கும், பகவதி யாருக்கும் மகனாக சம்பந்தர் பிறந்தார். சிவபாதவிருதயர் மிகுந்த சிவபக்தர். ஒவ்வொரு நாளும் கோயிலுக்குச் சென்று தோணியப்பரை வணங்குவர்.

ஒரு நாள் மூன்று வயதான சம்பந்தரையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்ற தந்தையார் குளத்தருகே குழந்தையை இருந்தி விட்டு நீராடச் சென்றார். தண்ணீருள் மூழ்கிய தந்தையாரைக் காணாமல் தவித்த குழந்தை கோபுரத்தைப் பார்த்து ‘அம்மா அப்பா’ என்று அழுதது.

அழுகையைக் கேட்ட தோணியப்பர் உமாதேவியாருடன் குழந்தையிடம் தோன்றினார். அழுத குழந்தைக்குப் பால் கொடுக்கும் படி உமாதேவியாரிடம் கூறினார். உமாதேவியார் பாலோடு சிவஞானத்தையும் கலந்து ஊட்டினார்.

நீராடிவிட்டு வந்த தந்தையார் உனக்குப் பால் கொடுத்தது யார்? என்று கோபத்துடன் அதட்ட குழந்தை கோபுரத்தைப் பார்த்து ‘தோடுடைய செவியன் . . . . .’ என்ற பதிகத்தைப் பாடியது.
அன்று முதல் அக்குழந்தைக்கு திருஞான சம்பந்தர் என்ற பெயர் உண்டாயிற்று. இவர் பல அற்புதங்களைச் செய்தும் தேவாரங்கள் பாடியும் சைவ நெறியை உலகெங்கும் பரப்பினார்.

**பிரணவர் ரவிவர்மன்.**
**வயது 6 மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை**

# The Depths of Ramayana

Miss. Jayashree Naganathasivam -செல்வி ஜெயஸ்ரீ நாகநாதசிவம்

Sacrifice was once an ordinary part of life. It is said that the satisfaction we gain through the sacrifice of something is greater than the happiness we would have gained in retaining it. But this is not how we think today. In an age of confusion and greed sacrifice has become a long lost affair, and those who still venture to try it are thought of as insane. But a story that is riddled with this great gift from beginning to end is that of the epic Ramayana. Sita and Lakshman's sacrifice of a luxurious life for Lord Rama. Hanuman's readiness to sacrifice even his life to save his beloved Lord's wife. These are the characters and deeds best known to all, the most prominent of the tale. But there is one sacrifice within Ramayana that is little known but in its greatness equivalent to even that of Hanuman and Lakshman.

During Lord Rama's Pattabishekam (crowning ceremony) all his friends and relatives and citizens of his land were present but he noticed the absence of Urmilai, Lakshman's wife. He approached his beloved brother and enquired as to where his wife was and Lakshman angrily retorted that she did not deserve to be spoken of. Lord Rama was astonished and proceeded to ask Lakshman the meaning of his angry words.

Lakshman replied, 'When first you, your wife and I were leaving for the forest I went to her to say farewell but instead of wishing me well she asked why I was going. She said, "Lord Rama is going on his father's orders, Princess Sita is going for her husband but why need you go? Stay and enjoy the luxuries of your kingdom instead of travelling for needless deeds."

At these words Lord Rama was thoughtful. He knew of Urmilai and was against the belief that she would have said such things and meant them. Therefore he summoned Urmilai and asked her the true meaning of her words.

Urmilai smiled and replied,

'My Lord, had I cried at his departure and sent my love and best wishes my husband would have thought of me endlessly and would not have performed his duties to their full and proper extent. But after my harsh words he felt only anger for me and did not think of me. This allowed him to serve you, his brother, with the required devotion as I wished'.

At these words both Lord Rama and Lakshman were stunned.

Was not Urmilai's sacrifice one of the greatest of this epic? It is easy for a person to do good deeds while the world is aware of them and approving but to do it in silence while in the guise of a villain is perhaps the hardest form of sacrifice. Urmilai, in her heart, did not question her husband's departure, did not allow her own feelings to intervene between the righteous and their duty but simply thought of the best she could do to help her husband and fulfilled her role to perfection. And in turn her greatness was understood by all as are all good deeds. Urmilai's sacrifice is a shining example to this age, one that consisted of patience, wisdom and strength of mind, traits that so many of us lack in these indifferent and uncaring times. Let us learn again the importance of good sacrifice and the joy it has given to the great and the good before us. ❄



# திருக்குறள்

## Let us learn Thirukkural

## வாழ்க்கைத் துணை நலம் (The virtue of a good partner)

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

1. An ideal life partner is she who has the required accomplishments to run a household, and runs it within her husband's income.

.....................................................................................

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமட்சித் தாயினும் இல்

2. If the requisite accomplishments for running a household are lacking in a wife, that family life, whatever splendid in other respects, is no life at all.

.....................................................................................

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

3. What is lacking for one, if he has a wife with good virtues? What life is there for one, if his wife is not accomplished with good virtues?

.....................................................................................

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்

4. What things are there of greater worth than a wife who has the rock-like strength of character called chastity?

.....................................................................................

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

5. She who does not worship God, but worships her husband, if she commands 'let it rain', it will rain.

.....................................................................................

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

6. A good wife is she who tirelessly guards her virtue, lovingly cares for her husband and preserves the good name of the family.

.....................................................................................

சிறைகக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை

7. Of what use is safe guarding a woman with imprisoning walls and guards? The safeguard provided by a woman's virtue is the best.

.....................................................................................

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு

8. If women would gain the glory of serving their husbands they would be honoured in heaven.

.....................................................................................

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை

9. To walk like a lion before those who revile him is not for those who do not have a virtuous wife.

.....................................................................................

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

10. A good wife is a blessing to a household.; and bringing forth good children are jewels of that marriage.

# Modes of Worship
# இறைவனைக் கும்பிடும் வழிகள்

Saivam (சைவம்) classifies worship broadly in a three fold way:

1) Temple worship
ஆலய வழிபாடு
2) Congregational worship
கூட்டு வழிபாடு, அடியார் வழிபாடு, தொண்டு
3) Personal worship
தியானம்

1. Temple worship involves the systematic way of invoking the blessings of Sivaperuman (சிவபெருமான்) in the temple as mentioned in the Aagamic (ஆகமம்) texts. The time factor, objects used for adoration, the holy mantras to be chanted both daily and special events and festivals are carefully considered in the temple worship.

2. Congregational worship involves showing respect and veneration to a staunch Saiva devotee. Saivism strongly asserts that there should not be any discrimination between Sivaperuman and his devotee. Sivaperuman in the temple is the static while the committed worshippers of Sivaperuman are the mobile shrines (நடமாடுமாடும் கோயில்) according to Thirumoolar. We can get all the benefits and blessings by worshipping the fellow devotees as we obtain from Sivaperuman.

3. Personal worship is the highest mode of worship since the devotee visualises Sivaperuman in the form of light (ஜோதி) in his body itself.
This type of adoration is achieved through constant prayer, consistent meditation and concurrent involvement. This type of worship does not require time, object, place etc. It has become a natural and routine affair to one who has installed Sivaperuman in the heart. This process is known as self-illumination and Sivaperuman's grace is enjoyed abundantly in this type of worship.

This mode of worship is explained by Saint Appar:

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

கலசம்
KALASAM
இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**
**இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!**

பெயர்: ..........................................
முகவரி: ..........................................
..........................................
..........................................
..........................................

Donation:£...............
Postage: £...............
Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB
Kalasam@hotmail.com

**Postage and admin**: **£10** (U.K/Europe); **£20** (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# MYTHS & PURANAS of Various GODS

**Who are Devas?**

The Devas are the guardians of light and life. They are the sons of the primal sage Kashyapa, a manifestation of Brahma, and his wife Aditi. Aditi's first-born was the Indra; he became the leader of the Devas and the god of rain. Her last-born was Vishnu; he became the champion of the gods. The other Devas are Agni, the god of fire, Vayu, the god of wind, Varuna, the god of the sea, Yama, the god of death. The Devas live in Amravati, the eternal city, where they drink Soma or Amrita, the sap of life and enjoy music and dance. They are energized by the Yagna ceremony. The Devas constantly fight the Asuras, their half brothers. When the Devas are victorious, the day dawns, the moon waxes, the tides rise, the rains fall, the plants grow, the animals breed. When they lose, the sun sets, the moon wanes, the tides ebb, the rains stop, the plants whither, the animals die.

**Who are Asuras?**

The concept of 'evil' does not exist in Hinduism, Buddhism or Jainism. There is no Hindu, Buddhist or Jain equivalent of Satan. Ravana, the Rakshasa-king, is the villain of the epic 'Ramayana', yet he is described as a brahmin, a scholar, a poet and a devotee of Shiva. Bali, the Asura-king, enemy of Indra, is remembered as the harbinger of prosperity. Prahalada, another Asura-king, is a devotee of Lord Vishnu. So, who exactly are the 'demons' (Asuras, Rakshashas & Pisachus) one constantly hears about in sacred stories?

The primal sage Vaishrava, son of Brahma, married two women. One of them gave birth to the race of Yakshas and the other gave birth to the race of Rakshasas. Both were forest sprits: the Yakshas were friendly, the Rakshasas hostile.

The Yakshas knew the secrets of the forests; they knew where rich treasures lay buried. Their leader Kubera built a golden city called Lanka in the middle of the sea. The Rakshasas, led by Ravana, attacked this city, defeated Kubera, drove out the Yakshas and took control of Lanka.

The Rakshasas ruled the forests and hated sages and seers who sought to bring the order of civilization into their realm. They would attack rishis who established ashramas in the forest and tried to perform yagna in the forest. Tired of being persecuted by the Rakshasas, the sage Vishwamitra, sought the help of Dasharatha, king of Ayodhya, who sent his son Prince Rama to defend the sages. Rama killed the Rakshasas and was praised by the sages.

Later, Ravana abducted Rama's beautiful wife Sita. In a Great War, with the help of monkeys and bears of the forest, Rama defeated the Rakshasas, killed Ravana and brought peace to the forests.

Also known as vetala, there are ghosts, goblins and vampires that haunt cemeteries and ruins. They are hostile spirits of the dead whose children did not perform funerary rites in their memory. As a result they are trapped in the twilight zone between life and after-life. They make their displeasure known by troubling humans. They can drive people mad, kill children and cause miscarriage.

These creatures can be appeased with gifts or frightened them away with spells. One can free them from their ghostly existence by performing their funerary rites.

Being spirits, unfettered by the laws of Space and Time, they have an uncanny knowledge about the past, present and future and a deep insight into human nature. Hence, many sorcerers seek to capture them and turn them into slaves.

A sorcerer once asked King Vikramaditya to capture a vetala who lived in a tree that stood in the middle of a crematorium. The only way to do that was by keeping silent. However, every time Vikramaditya caught the ghost, the ghost would enchant the king with a story that would end with a question. No matter how hard he tried, Vikramaditya would not be able to resist answering the question. This would enable the vetala to escape and return to his tree. The stories of the vetala have been compiled in the book: "Vetala-pachisi" or Vikramaathithan Kathaigal" in Tamil.

# The Saiva Saints's

Appar (Thirunavukkarasar) is the earliest of the four of the renowned saivaites saints. Born in a village near Thiruvadigai (in South Arcot district) in Tamil Nadu in the 7th Century CE. He became a Jain and rose to be the Abbot of a monastery in Thiruppaliyur, a few klio metres from Thiruvadigai. His elder sister Thilagavathi, who had brought him up, after their parent's early death, was sorley grieved. She prayed to the Lord Siva, daily, that he might turn to the faith of his fathers.

One day Appar was stricken with severe stomach pain. The incantations of the Jains and their medicines failed to cure him. One night he secretly went to Thiruvadigai. In the temple there, Thilakavathi gave him some vibhuthi. On applying the Vhibuthi he was cured, and thus he returned to Hinduism.

But the Jains complained to the Pallava King, Mahendra I.. Mahendra I was a Jain at that time. He sentenced the Appar to several forms of torture. But Appar survived all to the amazement of the king. The king too became a Hindu just as Appar became a great wandering apostle of Hinduism. Mahendra became a connoisseur of aesthetics, tasting life at many points. He was a warrior monarch and creator of temples.

Appar, carrying an instrument, with which to scrape away vegetation and weed growth in the temples, visited, wandered from place to place, singing the glory of the Lord. At an advanced age he attained beatitude.

Thirujnana Sambandar was born at Seergali (Thanjavur District) into a Brahmin family. When he was three years old, his father took him to the temple. He left Sambandar on the steps of the temple tank, while he was having a bath, before entering the temple. The child cried in hunger and Parvathi came upon the earth and fed milk to the baby. The contented baby was playing as the father came up the stairs. When the father saw the signs of milk in Sambandar's mouth, he demanded to let him know as to who gave him the milk. Undaunted, the baby pointed to the sky and recited his first Thevaram in praise to Devi Uma and Lord Siva.

He then wandered from temple to temple singing the praise of the Lord. He met Appar and visited many temples together and sang Thevarams together. Just as Appar reclaimed Pallava King to Hinduism, Sambandar made the Pandya King who had followed Jainsim, realise the truth and return to his faith, which he was born into.

Sambanthar having contributed to Hinduism's fillip at that time received beatitude and achieved 'moksha' at young age.

The third of the Saints Suntharar lived in the eighth century. Born in a village near to Appar's own, he was adopted by a neighbouring chieftain. When his marriage ceremony was about to begin, an old man appeared and claimed that Sundarar was his slave. The two exchanged hot words, and the old man proved his claim and took Suntharar with him to a temple and disappeared within. Suntharar realised that Lord Siva had appeared as old man, and sang Thevarams in praise of him. He carried on visiting various temples singing the praise of Lord Siva. Finally with the Saint from Kerala, Cheraman Perumal, Sundarar attained salvation in Mount Kailasa.

The fourth Saint Manikkavasagar's period is a question of dispute among the scholars. He was a minister to Pandya King (who might have been VaraGuna I 768 – 815CE). He was deputed to go to the coast in order to buy horses for the king. On the way back at Perunthurai he saw an ascetic beneath a tree.

Forthwith he abandoned all the horses and became a disciple to the sage. With the money for the horses he built a temple (Aavudayarkoil).
The king, incensed, recalled him to Madurai. He told the king that the horses would come, as Lord Siva asked him to say so. The horses came soon, but turned into jackals by midnight and ravaged the city. King tortured Manikkavasagar and put him in prison. Lord Siva raised the flood in nearby River Vaigai. Later, the King realised his folly and released the minister.
At his suggestion King ordered the citizens to repair the Vaigai riverbank. Each citizen was allocated a portion. An old Lady Vanthi was unable to do the work and seeked help. A young man came forward and agreed to repair her allotment in return for food (Pittu). At the site the young man having consumed all the food proceeded to lay in sleep instead of work. King had visited the banks and having seen the young man asleep, woke him and demanded to know the reason for inactivity. Receiving no reply he proceeded to beat him with a cane. The lashing fell on every creature on earth including the king, and the young man disappeared. King realised that Lord Siva himself had come to the aid of the ailing old lady. King requested Manickavasagar to take the kingdom. Manickavasagar refused and renounced worldly possession and started to visit temples and sing hymns. He arrived at Chidambaram and sang 'Thiruvasagam' considered a masterpiece of mysticism even centuries later.
He confronted some Buddhist priests from Sri Lanka in a disputation at the temple. He was asked the meaning of his hymns. He pointed at Lord Natarajah and explained that Lord himself is the meaning of his hymns, and merged into the Lord.

# The Talking Cave

A Lion, king of the forest, had grown old. He was no longer strong enough to hunt for its prey. Once, as he was walking in the forest, he came across a cave. He thought of hiding inside the cave and waiting for an animal to come in. He would then pounce on the animal and kill it, and have a good meal.

After some time, a fox came there. The cave belonged to him. As he was about to enter the cave, he saw the foot prints of a lion, all pointing towards the cave, but did not see any foot prints coming out again. He suspected that there was a lion inside the cave, but he wanted to make sure of it.

He thought of an idea. He stood at some distance from the cave and shouted, "Cave, cave, I have arrived. You always call my name every time I arrive. Have you forgotten me? Well, if you don't want to speak to me I will find some other cave to stay."

Hearing the words of the fox, the Lion thought that the cave was really a 'talking cave', and it talked with the fox everyday, but today it was not talking. He said to himself, "Perhaps, the cave is frightened of me. If the cave does not talk, the fox will go away and I will be without food. So, I should do something about it".

He decided to call the fox. He thought that the fox would then think the cave was talking and it would come inside the cave. He would then pounce on him and have a good meal. So the Lion roared loudly. The fox immediately recognised the voice of the lion. Now he was sure that there was a lion I his cave. He ran for his life. He was saved because of his clever idea, otherwise he would have become a good meal for the lion.

***Moral: He who thinks wisely and acts accordingly will survive.*** *

Commercial & Industrial
Guarding
Call now for a free survey and
quotation

SECURITY GUARD
WANTED

- Retail
- Construction
- 24 Hour Radio Patrols
- Key Holding
- Access Control
- CCTV

# CHARTER SECURITY

A Professional Service Every Time

1st Floor
Cambridge Road
Barking
Essex
IG11 8NR

Tel: 020 8507 7717
Fax: 020 8507 7702




இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (Tel: 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 15.01.2008 அன்று வெளியிடப்படுகிறது.